பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 200 ஆனி 02 ஆம் நாள் திங்கட்கிழமை 17 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in Marketing | Administration | HR
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@bliccampus.edu.lk
www.bliccampus.edu.lk

நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயத்துக்கு சிங்களவரால் நெருக்குதல் அதிகரிப்பு

- 3 பேருந்துகளில் அழைத்து வரப்பட்டு நேற்றும் போராட்டம்
- பெயர்ப்பலகை மீள வைக்கப்படாவிட்டால் விளைவு மோசமாகும்
- தமிழ்ப் பயங்கரவாதிகள் பிள்ளையார் ஆலயம் இருந்ததாக பொய் சொல்கின்றனர்

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு நாயாறு நீராவியடி ஏற்றம் பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலய வளாகம், பௌத்த ஆலயத்துக்குரியது என்று தெரிவித்து வெலிஓயாவிலிருந்து அழைத்து வரப்பட்ட சிங்கள மக்களும் பிக்குகளும் இணைந்து போராட்டம் நடத்தி 10 நாள்களுக்குள் மீண்டும் ஒரு போராட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது. அநுராதபுரத்திலிருந்து 3 பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட சிங்கள - பௌத்த மக்கள், இந்தப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

19

கொழும்பில் வீசப்பட்டிருந்த புத்தர் சிலைகளால் பதற்றம்!

கொழும்பு, ஜூன் 17

கொழும்பில் இனந்தெரியாதோரால் வீசப்பட்ட புத்தர் சிலைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இராஜகிரிய, லேக்ரைவ் பகுதியிலுள்ள வடிகானில் வீசப்பட்டிருந்த நிலையில் 12 புத்தர் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் வேலையில் ஈடுபட்டிருந்த சிலர் சிலைகளைக் கண்டுள்ளனர். இது குறித்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

07

ராஜபக்ச குடும்பத்துக்குள் வலுக்கின்றது மோதல்

கோத்தாவே வேட்பாளர் என்கிறார் பசில்

கொழும்பு, ஜூன் 17

அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் கோத்தபாயவே போட்டியிடுவார். அவரதுபெயரேமுதலிடத்தில் உள்ளது. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நிறுவுனர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்..

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் கோத்தபாய அரச தலைவர் வேட்பாளராக களமிறங்குவார் என்று பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார். அதனை மறுத்திருந்த மகிந்த ராஜபக்ச, தமது வேட்பாளரை இன்னும் தீர்மானிக்கவில்லை என்று

19

தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவேண்டும் மைத்திரி

மகிந்தவின் பங்காளிகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 17

அதிகாரப் போட்டியால் நாடு நாசமாகின்றதை நாம் விரும்பவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்க்கமான முடிவொன்றை உடனடியாக எடுக்கவேண்டும். இவ்வாறு மகிந்த அணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமானதினேஸ் குணவர்தன, வாசு

19

நாடாளுமன்ற தேர்தலை நடத்த மைத்திரி முயற்சி

அதற்காக பொதுவாக்கெடுப்புக்கு செல்லுவதற்குத் திட்டம்

கொழும்பு, ஜூன் 17

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னதாக, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்களின் அனுமதியைக் கோரும் பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரசதலைவர் மைத்திரிபால திட்டமிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதிக்கு முன்னதாக அரச

19

மோடியின் பிறந்த நாளன்று நாமலுக்கு திருமணம்

கொழும்பு, ஜூன் 17

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவுக்கு செப்ரெம்பர் 17ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

07

விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு முள்ளியவளையில் உழவு இயந்திரம் தடம்புரண்டதில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த குடும்பத் தலைவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மாமூலையைச் சேர்ந்த கதிரவேலு ஜெயராஜசிங்கம் (வயது- 58) என்ற 3

07

மைத்திரி தலைமையில் நாளை காலை 9.30மணிக்கு கூடுகின்றது அமைச்சரவை

கொழும்பு, ஜூன் 17

அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சரவையில்

19

முஸ்லிமாகப் பிறந்திருந்தால் நானும் ஸஹ்ரானாகியிருப்பேன்

ஞானசாரர் சர்சைப் பேச்சு

கொழும்பு, ஜூன் 17

முஸ்லிமாக நானும் பிறந்திருந்தால், தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய ஸஹ்ரான் போன்று மாறியிருப்பேன்.

07

ஓய்வூதிய முரண்பாடுகளுக்கு அடுத்த மாதத்திலிருந்து தீர்வு

நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

5 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதிய பயனாளர்களின் சம்பள முரண்பாடுகளை அடுத்த மாதத்திலிருந்து நீக்கவுள்ளதாக, நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

19

கடலில் குளித்த மாணவன் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு

மன்னார், ஜூன் 17

கடலில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமன்னார் மேற்கு பகுதியைச் சேர்ந்த,

07

'சோபா' உடன்படிக்கை சர்ச்சை பொம்பியோவுடன் பேச திட்டம்

கொழும்பு, ஜூன் 17

அமெரிக்கா முன்மொழிந்துள்ள "சோபா" உடன்பாட்டின் சர்ச்சைக்குரிய பிரிவுகள் தொடர்பாக, கொழும்பு வரும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவுடன் பேச்சு நடத்தப்படும் என்று அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

19

விகாரி வருடம் தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். சனி பெயர்ச்சி அடைய இன்னும் 6 மாதங்கள் இருந்தாலும் அவரது சஞ்சார பலன், பார்வை பலன் ஆறு மாதத்திற்கு முன்பு இருந்தே தொடங்கி விடும் என்பதால் இந்த பலன்கள்.

இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு, மகரம், கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரை சனியில் இருந்து விடுபடுகிறீர்கள். இட ராசிக்காரர்களுக்கு அஷ்டமத்து சனியில் இருந்து விடுதலை கிடைக்கிறது.

சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

ரிஷபம்

இட ராசிக்காரர்களே

உங்களுக்கு நல்ல காலம் பிறக்கப்போகிறது. சனி பகவான் உங்கள் ராசிக்கு ஒன்பது, பத்தாம் அதிபதி. தர்ம கர்மாதிபதி சனி பகவான், இந்த முறை மகரம் ராசியில் உங்களின் தர்ம ஸ்தானத்தில் ஆட்சி பெற்று அமரப்போகிறார். கடந்த 5 ஆண்டுகாலமாக அதாவது கண்டச்சனி, அஷ்டமத்து சனியால் அவதிப்பட்ட நீங்கள், நிம்மதி பெருமூச்சு விடும் நேரம் வந்து விட்டது.

ஆட்டி வைத்த சனிபகவான்

எட்டில் அமர்ந்த சனியால் கடந்த 2017ஆம் ஆண்டு முதலே அவதிக்கு ஆளாகி வந்தீர்கள். உடல் ரீதியாகவும், மனரீதியாக வும் பிரச்சினைக்கு மேல் பிரச்சினை இருந்தது. எப்போது எமக்கு விடிவுகாலம் பிறக்கும் என்று ஏங்கியிருப்பீர்கள். அதற்கான பொன்னான நேரம் தை மாதம் முதல் வரப்போகிறது. அஷ்டமத்து சனியின் பிடியில் இருந்து விடுபடப்போகிறது.

வருமானம்

இந்த சனிப்பெயர்ச்சியால் உங்களுக்கு பணவருவாய் அதிகமாக இருந்தாலும் உங்களின் நிதியை நிர்வாகம் செய்வதில் சரியாக இருங்கள். வரவுக்கு ஏற்ப செலவும் வரிசைகட்டி நிற்கும். புதிய முதலீடுகளை 2020 முடிய தவிர்த்து விடுங்கள். பங்கு சந்தையில் தேவையில்லாமல் முதலீடு செய்யக் கூடாது.

தேவையில்லாமல் பிறருக்குக் கடன் கொடுத்தல் கூடாது. காரணம் குருபகவான் உங்க அஷ்டம ஸ்தானத்திற்கு வந்து கேது உடன் அமர்கிறார்.

2021ஆம் ஆண்டில் இருந்து உங்களுக்கு வருமானம் கூரையை பிய்த்துக்கொண்டு கொண்டும். குருவும் சனியோடு இணைந்து 9ஆம் வீட்டில் சஞ்சரிப்பார்.

சம்பள உயர்வுடன் புது வேலை

இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில் உங்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். மொத்தம் 30 மாதங்கள் சனி பகவான் மகரம் ராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் வேலை செய்யும் இடத்தில் சம்பள உயர்வுடன் கூடிய புரமோசன் கிடைக்கும். தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும். தர்ம சனியால் நிறைய வருமானம் கிடைக்கும் ஆலயங்களுக்கு சென்று இறைவனைத் தரிசனம் செய்வதோடு நிறைய தர்மகாரியங்களுக்கும் செலவு செய்வீர்கள்.

பிரச்சினைகள் சரியாகும்

உங்கள் ராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சாரம் செய்து வந்த சனிபகவானால் சொல்லெனாத் துயரங்களையும் துன் பங்களையும் அளித்ததோடு வீண் வழக்குகள் பிரச்சனை கள், போராட்டங்கள், மனகுழப்பங்கள், அசிங்கம், அவ மானங்கள் ஏற்பட வைத்து உங்களை ஒரு வழி பண்ணி விட்டார். வேலையில் பிரச்சனை, விபத்து, ஆபரேசன் இப்படி பலதரப்பட்ட பிரச்சினைகளால் அல்லல்பட்டு வேத னைப் படவைத்தார். தற்சமயம் சனிபகவான் உங்கள் ராசிக்கு ஒன்பதாம் இடத்தில் மகரம் ராசிக்கு இடம் பெயர்ந்து ஆட்சி பெற்று அமர்ந்து அதிக நன்மைகளை தருவார்.

சுறுசுறுப்பாக இருப்பீர்கள்

இந்த சனிப்பெயர்ச்சியால் இது வரை உங்களுக்கு ஏற் பட்ட தடை நீங்கி எதிலும் சுயமாகவும், விரைவாகவும் செயல்பட ஆரம்பிப்பீர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் செயல்படுவீர்கள். எதிலும் தலைமை ஏற்று நடத்தும் வண்ணம் உங்கள் செயல்பாடு அதிகரிக் கும். உங்களது மதிப்பும், மரியாதையும் உயரும். உங் களை அறியாமலேயே ஒரு உற்சாகம் தொற்றிக்கொள் ளும். சமூகத்தில் நல்ல பெயருடன் வலம் வருவீர் கள். பேச்சில் சாமர்த்தியம் கூடும்.

பொன் பொருள் சேர்க்கை

பணப்புழக்கம் சற்று தாளாரமாக இருந்து வரும். உங்கள் பேச்சை மற்றவர்கள் மதித்து நடப்பர். புதிய ஆடை ஆபர ணங்கள் வந்து சேரும். எதிர்பாராத தனவரவும், பொருள் வரவும் ஏற்படும். வெளியில் இருந்த பத்திரங்கள், நகை கள் கைக்கு வந்து சேரும். பெண்களுக்கு உடல் நலப்பி ரச்சினைகளும், மன அழுத்தங்களும் தீரும். வேலை தேடுபவர்களுக்கும், வேலை இல்லாமல் இருப்பவர்களுக் கும் நல்ல வேலை வாய்ப்புகள் அமையும்.

வெளிநாடு வாய்ப்பு வரும்

இதுநாள்வரை தடைபட்டு வந்த திருமணம் கை கூடி வரும். இதுநாள் வரை குழந்தை பாக்கியம் இல்லாதவர் களுக்கு மழலைச் செல்வம் மடியில் தவழும் காலம் வரப்போகிறது. வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்வீர்கள். வண்டி வாகனம் வாங்குவீர்கள். வீட்டுக்குத் தேவையான ஆடம்பர பொருள்களும் வாங்குவீர்கள். ஆன்மீக யாத் திரை செல்வீர்கள். சிலருக்கு வெளிநாடு வாய்ப்புகள் கைகூடி வரும்.

உயர்கல்வி யோகம்

ஒன்பதாம் இடத்தில் சனி அமர்ந்து உங்கள் ராசிக்கு லாப ஸ்தானம், முயற்சி தைரிய ஸ்தானம், ருண ரோக சத்ரு ஸ்தானங்களை சனி பகவான் பார்வையிடுகிறார். இத னால் மாணவர்களுக்கு உயர்கல்வி யோகம் தேடி வருகி றது. வெளிநாட்டில் கல்வி பயில சந்தர்ப்பமும் அமையும். தைரியம் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதுப்புது விடயங்களை கற்றுக்கொள்வீர்கள். எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். நண்பர்களால் நன்மை ஏற்படும்.

எந்தக் கிழமையில் தூபம் போட்டால் என்ன பலன் கிடைக்கும்?

சாம்பராணி புகை போட்டு இறைவனுக்கு காட்டுவது தூபம் என்று பொருள். இதனை ஒவ்வொரு நாளும் தவறாது இல்லத்தில் செய்து வந்தால் பல வகையான நன்மைகளை அடைய முடியும். எந்தக் கிழமையில் தூபம் போட்டால் என்ன பலன் கிடைக்கும் என்பதை இங்கே பார்க்கலாம்.

1. ஞாயிற்றுக்கிழமை - ஆத்ம பலம், செல்வாக்கு, புகழ் உயரும். ஈஸ்வர அருள் கிடைக்கும்.
2. திங்கட்கிழமை - தேக, மன ஆரோக்கியம், மன அமைதி கிடைக்கும். அம்பாள் அருளைப் பெறலாம்.
3. செவ்வாய்க்கிழமை - எதிரிகளின் போட்டி, பொறாமை நீங்கும். தீய - எதிர்மறை எண்ணங்களின் மூலம் உண்டான கண் திருஷ்டி கழியும். கடன் நிவர்த்தியாகும். எதிரிகளின் தொல்லை நீங்கும். முருகப்பெருமான் அருள் கிடைக்கும்.
4. புதன்கிழமை - நம்பிக்கை துரோகம், சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். நல்ல சிந்தனை வளரும். வியாபாரத்தில் வெற்றி பெறுவீர்கள். சுதர்சனரின் அருளைப் பெறுவீர்கள்.
5. வியாழக்கிழமை - அனைத்து விதமான சுப பலன் களையும் பெறுவீர்கள். பெரியவர்கள், மகான்களின் ஆசி கிடைக்கும். முன்னேற்றம் அதிகரிக்கும்.
6. வெள்ளிக்கிழமை - லட்சுமி கடாட்சம் இல்லத்தில் நிறையும். செய்யும் காரியங்கள் அனைத்தும் வெற்றியாகும்.
7. சனிக்கிழமை - சோம்பல் நீங்கும். துன்பங்கள் அனைத்தும் விலகும். சனீஸ்வரன் மற்றும் பைரவரின் அருளைப் பெறலாம்.



தனக்கு ஏற்படும் துன்பம் போல...

ஒரு சமயம் பிரம்மன் நாரதரிடம், "நாரதா! உலகில் நீ பார்த்தவற்றுள் எந்த விடயத்தை எண்ணி மிகுந்த ஆச்சரியம் கொண்டாய்?"என்று கேட்டார்.

"தந்தையே! நான் கண்டு ஆச்சரியப்பட்டதென்றால், இறந்து கொண்டிருப்பவர்கள் இறந்து போனவர்களைப் பார்த்து அழுவது தான்!" என்றார் நாரதர்.

அடுத்து, "நீ எண்ணி வியந்த வேறொரு விடயம் இருந்தால் அதையும் சொல்லேன்!" என்றார் பிரம்மா.

"மனித மனம் படுத்தும் பாடு இருக்கிறதே" என்று அதை எண்ணி வியந்திருக்கிறேன். உலகில் உள்ள எல்லோருக்கும் பாவ, புண்ணியம் பற்றிய சிந்தனைகள் எழாமல் இருப்பதில்லை. மக்கள் பாவச்செயல்களைச் செய்கிறார்கள். அதற்கான விளைவுகளையும் பெற்றுத் துன்புறுகிறார்கள். புண்ணியங்களைச் செய்து நன்மைகளை அடைந்தாலும், நல்ல செயல்களைச் செய்யத் தயங்குகிறார்கள். பண்பான பேச்சை விரும்புகிறார்கள். ஆனால், பிறர் மீது கோபம் கொள்கிறார்கள். தன்னிடம் மற்றவர்கள் உண்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாலும், உண்மையை விட்டு விலகி வெகு தூரத்தில் நிற்கிறார்கள்.

இப்படி மனித மனத்தின் கோணல்களை நினைத்து வியந்திருக்கிறேன்"என்றார் நாரதர். "இதற்கெல்லாம் தீர்வு ஏதாவது சொல்லேன்?" என்றார் பிரம்மா.

"தந்தையே! தனக்கு ஏற்படும் துன்பம் போலத்தானே மற்றவர்களுக்கும் அதன் வலி இருக்கும் என்பதை எல்லா மனிதர்களும் உணர வேண்டும். அதன் பின் அவர்களுக்கு எந்த தீங்கும் நேராது" என்றார்.

நான் விரும்பும் தொழில்



- நாம் ஒவ்வொருவரும் எமது சிறுவர் பருவம் கடந்து கல்வி கற்று முடித்த பின் எமக்கும் சமூகத்துக்கும் பயன் படக் கூடிய ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும்.
- தொழில் செய்வதன் மூலம் எமது மூளை, உடல், உள்ளம் என்பன உறுதிபடுகிறது.
- எமது அன்றாட வாழ்க்கைக்கு வருமானம் கிடைக்கிறது.
- வருமானம் எமது வயிற்றின் பசியைப் போக்க உணவைக் கொடுக்கிறது.
- எமது பசி போக்கப்பட்டால் எமது வாழ்க்கை இனிக்கும்.
- வாழ்க்கை இனித்தால் பிறருக்கு உதவ மனம் வரும்.
- ஆகவே பிறருக்கு உதவக் கூடிய தொழிலைச் செய்வது சிறந்தது.
- தொழில்கள் யாவுமே ஏதோ ஒரு வகையில் மனித வாழ்க்கைக்கு உதவி புரிவனதான்.
- ஆசிரியர் மாணவர்களுக்கு வாழ்க்கைக்கான ஒழுக்கக் கல்வியையும் அறிவியல் கல்வியையும் வழங்கி மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுபவர்கள்.
- மருத்துவர் நோய்களில் இருந்து உயிர்களைக் காப்பவர்.
- இவ்வாறான தொழில்களை சேவை என அழைப்பார்கள்.
- நான் விரும்பும் தொழில் ஆசிரிய சேவைதான்.
- ஆசிரியர் மாணவர்களின் அகவிழியைத் திறப்பவர்.
- நல்ல குடிமக்கள் கொண்ட ஒரு சமுதாயத்தை ஆசிரியர் உருவாக்குவர்.
- சிந்தனையைத் தூண்டுபவர் ஆசிரியர்.
- நற்பழக்கவழக்கங்களைச் சொல்லிக் கொடுப்பவர் இவர்.
- வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவர் இவர்.
- மாதா பிதா குரு தெய்வம் என இவர் போற்றப்படுகிறார்.
- குரு இல்லா வித்தை பாழ் என்பார்கள்
- எழுத்தறி வித்தவன் இறைவனாவான்.
- அறிவைப் புகட்டி அன்பைப் பெருக்கும் ஆசிரிய சேவையே நான் விரும்பும் தொழில்.

இலங்கையின் அரச தலைவர்கள்

1. வில்லியம் கோபல்லாவ- 1972 - 1978

2. ஜே.ஆர். ஜெயவர்த்தனா- 1978 - 1989

3. ரணசிங்க பிரேமதாச- 1989 -1993

4. டிங்கிரி பண்டா விஜயதுங்க- 1993 - 1994

5. சந்திரிகா குமாரணதுங்க- 1994- 2005

6. மகிந்த ராஜபக்ச - 2005- 2015

7. மைத்திரிபால சிறிசேன- 2015முதல் இற்றை வரை

நல்ல பிள்ளை

நல்ல பிள்ளை நான்தானே
நன்மை நாளும்
செய்வேனே

காலை நேரம்
எழுந்திடுவேன்

இறையைத் தினமும்
தொழுதிடுவேன்

அண்ணன் தம்பி
எவரோடும்
அன்பாய் நானும்
பழகிடுவேன்

நல்ல பிள்ளை நான்தானே
நன்மை நாளும்
செய்வேனே

பட்டாம்பூச்சி!

சின்னச் சிறகை விரித்தே
சீராய் பறக்கும் பூச்சி
பட்டுப் போல அழகாய்
பறக்கும் பட்டாம் பூச்சி
வண்ணப் பூக்கள் தேடி
தாழ்ந்து பறக்கும் பூச்சி
பூக்கள் மீது அமர்ந்தே
தேனை உறிஞ்சும் பூச்சி
சிறுவர் விரும்பும் பூச்சி
தீமை செய்யாப் பூச்சி
தொட்டுப் பார்க்கப் போனாலே
எட்டப் போகும் பூச்சி
தூரப் பறந்து போனாலும்
மனம் போகும் பின்னாலே
தேடி நாடிச் செல்வேனே
நல்ல பட்டாம் பூச்சியை !

இயற்கை

இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது.

இயல்பாகத் தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை என்கின்றோம். உயிரினம், உயிரின அறிவு போன்றவையும் இயற்கையில் அடங்கும்.

பொதுவாக இயற்கையை ஆய்வு செய்வ தென்பது அறிவியலின் மிகப்பெரிய ஒரு பகுதியாகும்.

மனிதர்களும் இயற்கையின் ஒரு பகுதியே ஆவர். மற்ற இயற்கை நிகழ்வுகளிலிருந்து மனிதனின் நடத்தைகள் முற்றிலும் வேறுபட்ட தனியான ஒரு பிரிவு என்று பெரும்பாலும் கருதப்படுகிறது.

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை விலை மனுக் கோரல்

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தேவையான தகைமைகளை கொண்டுள்ள பேரூந்து உரிமையாளர்களிடம் இருந்து வட மாகாணத்தினுள் மாவட்டங்களிற்கிடையேயான சொகுசு கடுகதி பேரூந்து சேவைகளுக்கான விலை மனுவினை கோருகின்றது. கேள்வி நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் பின்வருமாறு.

1. விண்ணப்பதாரி வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிச்சட்ட பிரமாணங்களுக்கு அமைவாக விண்ணப்பம் செய்தல் வேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களாவது வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதனை வாக்காளர் பட்டியல் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
2. பேரூந்து முழுதாக குளிரூட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.
3. ஆசனங்களின் எண்ணிக்கை 28 இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. பேரூந்து இலங்கையில் பதிவு செய்து பத்து வருடங்களிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
5. பயணி ஒருவரிடம் அறவிடப்படும் கட்டணம் சாதாரண கட்டணத்தின் இரு மடங்காகும்
6. உரிய பயிற்சிகள் பெற்றுக்கொண்டு வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட சாரதி, நடத்துநர் கடமையாற்றுதல் வேண்டும்.
7. பயணிகளுக்கான பயணச்சீட்டு கட்டாயமாக வழங்கப்படுதல் வேண்டும்.
8. பயணிகள் எல்லோருக்கும் ஆசன வசதி இருத்தல் வேண்டும். ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றக்கூடாது.
9. மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 2000/- காசாக செலுத்தி கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களை 17.06.2019 முதல் 10.07.2019 வரை அலுவலக நேரங்களில் காலை 9.00 முதல் மாலை 3.00 வரை இல.45, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குழி என்னும் முகவரியிலுள்ள வீதிப்பயணி கள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
10. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 11.07.2019 ஆந் திகதி முற்பகல் 11.00 முன்னர் பெறுகைக்குழு தலைவர், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, இல.45, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குழி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடி யாகவோ பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சொகுசு கடுகதி பேரூந்து சேவைக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிடல் வேண்டும்.
11. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விவரங்களை 021 221 5961 எனும் தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.
12. ஒப்பந்த அளிப்பு செய்யப்படும் பொழுது வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் சொகுசு கடுகதி வழியனுமதிப்பத்திரத்தினை ஒப்பந்த அளிப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் குறிக்கப்பட்ட தொகையினை காசாக செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. கேள்வி நடைமுறை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre - Bid Meeting) 01.07.2019 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் நடைபெறும்.
14. கேள்விப்பத்திரங்களை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, வடமாகாணம்.

மரண அறிவித்தல்

திருமதி சறோஜினிதேவி கோபாலபிள்ளை

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி கோபாலபிள்ளை 15.06.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - பூமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், கலாநிதி. ஜெயந்திரா (A.J.Mரேடர்ஸ்).மாலதி (பெற்றோலிய கூட்டுத்தாபனம், யாழ்). ஜெயக்குமார், ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தாயும், நிர்மலேஸ்வரி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் உலகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செபனேஸ்வரன் (கனடா), பிரதாபன் (கனடா), தனுசங்கர் (அரச மர கூட்டுத்தாபனம்), டிலான்சினி (கனடா), தாட்சாயினி (கனடா), ஹரீசன், அஜித்சங்கர் (சட்ட பீட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்), துவன்சங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2/1, கடுக்காயடி வீதி,
நல்லூர்.

(cs 26085) (13.17)

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசாத்தி இராசையா

தோற்றம் 10.08.1936 — மறைவு 16.06.2019

நாவாந்துறை கெனடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராசாத்தி இராசையா நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - மேரி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னட்டி - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும், இராசையாவின் மனைவியும், ஜெயந்தி, வசந்தி, விஜிதா, மோகனாதேவி, வனிதாதேவி, மகேஸ்வரன், காலஞ்சென்றவர்களான ராஜ பவானி, சரவணபவான், விக்னேஸ்வரன் ஆகியோரின் தாயா ரும், விஜயகுமார், குணசீலன், செல்வராசா, பிலோமினா, நிமலினி, சுகந்தினி, காலஞ்சென்ற கோவிந்தராசா ஆகியோ ரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (17.06.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து புனித சென்நீக்கிலஸ் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி வீதி,
நாவாந்துறை.

(CS/26081)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

சுப்பையா சிவஞானசுந்தரம்

(முன்னாள் ஊழியர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்/ இலங்கை போக்குவரத்து சபை)



தோற்றம் 13.12.1936 — மறைவு 16.06.2019

தாவடியைப் பிறப்பிடமாகவும், கே.கே. எஸ் வீதி, கோண்டாவில் மேற்கை வதிவிட மாகவும் கொண்ட சுப்பையா சிவஞான சுந்தரம் நேற்று (16.06.2019) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்லாச்சி தம்பதிகளின் பாச மிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பி ஐயா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மரு மகனும், பஞ்சரத்தினத்தின் அன்புக் கணவ ரும், தாமரைச்செல்வி, காலஞ்சென்ற முரளி தரன் மற்றும் தமிழ்செல்வி (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், பால கணேஷ், சாந்தரூபி, சிவகுமாரன் ஆகியோ ரின் மாமனாரும், ஆர்த்தி, அனுயா, பிரவீன், மிருண், நரேன் ஆகியோரின் அன்புப் பேர னும், காலஞ்சென்றவர்களான நவரெத்தினம், நடேசு, அன்னரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்க ளான தங்கரெத்தினம், பாலசுந்தரம், விஜயசுந்தரம், சிவஞானசுந்தரம், தனரெத் தினம், வசந்தரெத்தினம் மற்றும் கோகிலரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.றோட்,
கோண்டாவில் மேற்கு.

(CS/26082)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 2647523, 021 205 3455

ஆறுமுகம் சுப்பிரமணியம்

(மணிமாமா)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மூத்த தம்பி - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான சோமசுந்தரம் இரத்தினம், ஆறுமுகம் கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, பாக்கியவதி, தேவாம்பிகை, சுப்பிரமணியம், ஞானேஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரி, மனோரஞ்சிதம், ரதிமலர் ஆகியோரின் மைத்துனரும், முருகானந்தம் (சபரி பலஸ், பிரான்ஸ்), தர்மானந்தன், காலஞ்சென்ற அனுரானந்தன், துஷாளினி (சுவிஸ்), துஷியந்தினி, துர்ஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தி, சந்திரா, சுதாகர், விஜயநாதன், விமல்ராஜ், கிருஷாந் ஆகியோரின் மாமனாரும், சுஜீவன், சபரிசன், அரிஸ், இமையவன், தர்சிகா, கீர்த்திகா, நாவேந்தன், லதுஜன், பிருதாயன், நிதுஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2019) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(CS/26083)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 463 3491, 077 5515411

மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு கேள்வி அறிவித்தல்

மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு 2019/20 ஆம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள்

1. முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 2019/ 20 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
   - அ. உலர் உணவு
   - ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
   - இ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.

   2019 முதல் 2020 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு வழங்கல்கள். சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 17.06.2019 தொடக்கம் 08.07.2019 ஆம் திகதி வரை காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணி வரையும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்கு கிளையில் வழங்கப்படும்.
2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்கு கிளையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 08.07.2019 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 08.07.2019 மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.
4. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

	விபரம்	மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா)	பிணை வைப்பு (ரூபா)
01	உலர் உணவு வழங்கல்	2,500.00	100,000.00
02	அழுக்குத் துணி சலவை செய்தல்	1,000.00	5,000.00
03	வாகன சுத்திகரிப்பு	2,500.00	50,000.00

5. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
6. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
7. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
8. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.0212061423

வைத்திய கலாநிதி திரு.செ.கஜன்
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு
மாவட்ட பொது வைத்தியசாலை
முல்லைத்தீவு.

மரண அறிவித்தல்கள்

மயில்வாகனம் கந்தையா

(ஓய்வு நிலை கிராம நீதிமன்ற அலுவலர், முன்னாள் கணக்காளர், சாவகச்சேரி சந்திரசேகர் வாரிவனநாத சிவன் கோவில்)

பிறப்பு 20.07.1922 இறப்பு 16.06.2019

சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் சிவன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கந்தையா நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரஸ்வதி, இராசபூபதி காலஞ்சென்ற கமலாவதி மற்றும் கருணாநிதி, பத்மாவதி, திலகவதி, மங்களேஸ்வரி (ஆசிரியை, மட்டுவில் தெற்கு அ.மி.த.க.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியானந்தன், வைத்தீஸ்வரன், ஸ்கந்தபூர்வஜா, சங்கநிதி, ரவிராஜ், ஜெயக்குமார் (தபாலகம் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமாமனாரும் கேதீஸ்குமரன் (விற்பனை நிறைவேற்று அதிகாரி பாம்கெமி வடக்குமாகாணம்)-டோசி(ஆசிரியை), மதனகுமார்-பிரியங்கா (லண்டன்) காலஞ்சென்ற கிசோக்குமார் மற்றும் ஜங்கரன்(சுகாதார கொள்கை நிறுவனம் - கொழும்பு), குருபரன் (விற்பனை அலுவலர் பாம்கெமி), நிஷாயினி - விஜயானந், முரளிதரன், கிரிதரன் - தனுசியா (மருந்து விற்பனைப் பிரதிநிதி) வினோதன் - விஜித்தா (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்), அகிலன் - சங்கீதா (நியுசிலாந்து), சுகந்தன் - கார்த்திகா (நியுசிலாந்து), ஜனகன், குமுதினி - இராசேந்திரன் (பிரான்ஸ்), தக்சனா (தொழில்நுட்ப கல்வித் திணைக்களம் மாத்தளை), திலகராஜ் - கிரிஜா (இந்தியா), தர்சனா, திருசிகன் (மாணவர்கள் சாவகச்சேரிமகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்புப்பேரனும் டெபோறா, அபிநாத், தன்சிகா, பிரணவேஸ், தீவேஸ், டினுவர்ஷன், அபிஷா, அக்சிதா, அஜீன், அக்சன், டுசானி, மிதுலன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று16.06.2019அவரதுஇல்லத்தில்நடைபெற்றுபூதவுடல் கொட்டையடித்தூவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்: **குடும்பத்தினர்.**
077 408 0514, 077 087 3602

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

மரண அறிவித்தல்

மலர்வு 12 . 02 . 1935

உதிர்வு 16 . 06 . 2019

விஸ்வப்பிரம்மஸ்ரீ ஆறுமுகம் கமலாம்பிகை

(கனகம்மா)

காரைநகர், களபூமி காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வப்பிரம்மஸ்ரீ ஆறுமுகம் கமலாம்பிகை (கனகம்மா) நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி பாறுவதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் அமரர் விஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கேபாலகிருஷ்ணன், புண்ணியமூர்த்தி (கனடா), மற்றும் சிவபாலன் (சிவம், கனடா), விஜய நிர்மலா, ஆகியோரின் பாசமிகுதாயாரும் காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் தெட்சனாமூர்த்தி பரமேஸ்வரி, ஆகியோரின் சகோதரியும் பிறேமிலா (கனடா), சிவாஜினிதேவி (கனடா), ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீராம், ஜெயராம், திவ்ஜா, சுஜன், அஷ்வன், லக்ஷன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2019) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவபாலன் (சிவம் - கனடா) 0212051661
பிறேமிலா (மருமகள் - கனடா) 001905 8048483
சிவாஜினி தேவி (மருமகள் கனடா) 001905 2674748



மலர்வு 09 . 07 . 1945

உதிர்வு 16 . 06 . 2019

செல்லையா தம்பிமுத்து

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வ்சிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிமுத்து நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்பு கணவரும் நிர்மாலினி, வித்தியதீபன், கிருபாகரன், ஹேமசௌத்ரி, டினேஸ்குமார், ஆகியோரின் தந்தையும் இராசயோகம், பிரகாஷ், நிருந்தா ஆகியோரின் மாமனும் இராஜலக்ஷன், நிஷங்கர், சுபிராஜ், கஷ்வினி, அஸ்வின், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2019) திங்கட்கிழமை மு .ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன் காடு இந்து மயானத்திற்கு பி.ப 1.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

• இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராசவீதி, கோப்பாய் வடக்கு
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

திருமதி

இராசம்மா

கனகரத்தினம்

மலர்வு

23.02.1940

உதிர்வு

18.05.2019

கடந்த 18.05.2019 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து உதவிகள் புரிந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கெண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.06.2019) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம். குடும்பத்தினர்.

வீடு காணி விற்பனைக்கு

அச்சுவேலி சென் திரேசா பாடசாலை அருகில் அமைந்துள்ள 7 பரப்பு சிறு வீட்டுடன் அமைந்த காணி விற்பனைக்குண்டு.

076 0679 142, 077 6704 364

வீடு வாடகைக்குத் தேவை

அரச தொழில்பார்க்கும் 3 பேர் கொண்ட குடும்பத்துக்கு யாழ்.நகர்ப் பகுதியில் அல்லது அதனை அண்டிய பகுதியில் தேவை.

071 969 2192 (CS/ 26087) (11.17)

கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுச் சந்தியில் கடைத்தொகுதி ஒன்று வாடகைக்கு உண்டு.

நிலம் 18x24 சதுர அடி. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (CS/ 26089) (11.17)

021 312 3838, 077 947 9996

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

021 493 1111

advt@uthayan.com

FS Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

esprintersjaffna@gmail.com

021 492 7471, 021 492 7472

கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் **கோபாலபிள்ளை மாலதி** அவர்களின் தாயார்

கோபாலபிள்ளை சறோஜினிதேவி

அவர்கள் கடந்த (15.06.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும் சக ஊழியர்களும்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வடபிராந்தியக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

மரண அறிவித்தல்

கந்தையா பத்மநாதன்

(முன்னாள் தலைவர் காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழிற்சங்கம் - நீர்வேலி)

நீர்வேலி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த கந்தையா பத்மநாதன் நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு.
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன அழைப்பும்

கடந்த 15.05.2019 ஆம் திகதி இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தெய்வம்

அமரர்

திருமதி நாகம்மா பொன்னையா

அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (17.06.2019) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள "துர்க்கா மணிமண்டபத்தில்" நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.46, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்
விலைமனு கேள்விக்கான அழைப்பு
அழுக்குத்துணிகள் சலவைகள் சேவை சுத்திகரிப்பு பொருட்கள் வாகன சுத்திகரிப்பு உலர் உணவு, சமைத்தஉணவு வழங்கல் சேவை-2019/2020

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

தொ. இல	பெறுகை இலக்கம்	பெறுகையின் தன்மை	சேவை வழங்கவேண்டிய நிலையம்	கேள்வி உத்தரவாத முறி
01.	DH/CM/2019/01 தொடக்கம் 17வரை	சமைத்த உணவு வழங்கல் சேவை	பிரதேச வைத்தியசாலைகள்	10000.00
02.	D/JF/2019/02	உலர் உணவு வழங்கல் சேவை	ஆதாரவைத்தியசாலை,பருத்தித்துறை	80000.00
03.	D/JF/2019/03		பிரதேசவைத்தியசாலை,வல்வெட்டித்துறை	30000.00
04.	D/JF/2019/04		ஆதார வைத்தியசாலை,சாவகச்சேரி	50000.00
05	D/JF/2019/05		பிரதேச வைத்தியசாலை,சங்கானை	25000.00
06	D/JF/2019/06		ஆதார வைத்தியசாலை,ஊர்காவற்துறை	30000.00
07	D/JF/2019/07		பிரதேச வைத்தியசாலை,நெடுந்தீவு	15000.00
08	D/JF/2019/08		பிரதேச வைத்தியசாலை,அச்சுவேலி	20000.00
09	D/JF/2019/09		பிரதேசவைத்தியசாலை,கோப்பாய்	15000.00
10	H/LS/2019/01 தொடக்கம் 10வரை	அழுக்கு துணிகள் சலவைகள் சேவை	பருத்தித்துறை(அ), பருத்தித்துறை(ஆ), சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பளை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில்	3000.00
11	RDHS/CLE-ME/2019-2020	சுத்திகரிப்பு பொருட்களுக்கான வழங்கல் சேவை	பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகள்	10000.00
12	RDHS/VS/2019/01	வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை	யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை	10000.00

1. விலைகேள்விதாரர் தெரிவுசெய்யும் விநியோகத்திற்கான ஒருநபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் இல 572/3 ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம்- 021 222 2278/6253 Ext 20) மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்க முடியாத வைப்புத் தொகையாக ரூபா 1000.00 காசாகச் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 17.06.2019 தொடக்கம் 27.06.2019 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்
4. விலைக்கேள்விகள் 28.06.2019 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடி யாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப் படல் வேண்டும். **"விண்ணப்பிக்கும் விநியோகத்தின் பெயர் 2019/20, விண்ணப்பிக்கும் வைத்திய சாலை"** போன்ற விபரங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப் படாமல் திருப்பியனுப்பப்படும். குறித்த விண்ணப்பங்கள் 28.06.2019 திகதி 10.00 மணிக்கு பெறுகைகள் 1 தொடக்கம் 09 உம் 12.00மணிக்கு 10,11, 12 உம் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலை யில் திறக்கப்படும்.
5. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
6. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலை கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

விபத்தில்...

பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

'கடந்த 8ஆம் திகதி உழவு இயந்திரத்தின் மக்காட் பகுதியில் அமர்ந்திருந்து ஜெயராஜ சிங்கம் பயணித்துள்ளார். வற்றாப்பளைப் பகுதியில் உழவு இயந்திரம் வீதியின் அருகில் சரிந்துள்ளது. உழவு இயந்திரத்துடன் இருந்த கலப்பை வீதியில் முட்டியுள்ளது. உழவு இயந்திரம் கவிழ்ந்துள்ளது. மக்காட்டிலிருந்து பயணித்த ஜெயராஜசிங்கம் படுகாயங்களுடன் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்' என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ.5,105)

முஸ்லிமாகப்...

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

காலியிலுள்ள விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தில் குண்டை வெடிக்க செய்த ஸஹ்ரான் ஹசீம் இலங்கை இளைஞன். முஸ்லிம் இனத்தவராக பிறந்திருந்தால் நானும் அவர் போன்றவராக மாறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

இலங்கையின் சம்பிரதாயபூர்வமான முஸ்லிம் மக்களுடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த நாடு ஒரு வீடு. இந்த வீட்டுக்குள் விச பாம்பு நுழைந்திருந்தால் அனைவரும் இணைந்து அந்த விச பாம்பை அழிக்க வேண்டும். எனது மனம் துறவரம் பூண்டிருந்தாலும் தேசிய பிரச்சினையின் போது எனது பங்களிப்பு வித்தியாசமானது - என்றார். (ஒ.5)

மோடியின்...

மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை, இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்த போது, தனக்குத் திருமணம் நடைபெறவுள்ளது குறித்து அவர், தகவல் வெளியிட்டுள்ளார்.

செப்ரெம்பர், 17ஆம் திகதி தனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ச கூறியதும், எதற்காக அந்த நாளை தெரிவு செய்தீர்கள் என்று இந்தியத் தலைமை அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு நாமல், சாதாரணமாக ஒரு நாளை தெரிவு செய்ததாக குறிப்பிட்டார்.

அப்போது, இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, ஏன் அவ்வாறு கேட்டேன் என்றால், அன்று தான், (செப்ரெம்பர் 17) எனது பிறந்த நாள், என்று பதிலளித்துள்ளார்.

நாமல் ராஜபக்சவை திருமணம் செய்து கொள்ளவுள்ள மணப்பெண், நன்கு அறியப்பட்ட விளையாட்டு ஆர்வலரும், லங்கா ஸ்போர்ட்ஸ் ரைசனின் (எல்.எஸ்.ஆர்) நிறுவுநருமான திலக் வீரசிங்கவின் ஒரே மகள், ஆவார். இவரது, தாயார் அருணி விக்ரமரத்ன, தேசிய அளவிலான ஓட்ட சம்பியனாவார். இவர்கள், ஒன்பது விடுதிகளை நடத்தி வருகின்றனர். (ஒ.5)

கடலில்....

தலைமன்னார் புனித லோறன்ஸ் வித்தியாலயத்தில் தரம் பதினொன்றில் கல்வி கற்கும் இளங்குமரன் அஜேய் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடியுள்ளார். பின்னர் தலைமன்னார் மேற்கு கடல் பகுதிக்கு குளிக்கச் சென்றுள்ளனர். கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது, கரையிலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்த படகைத் தொட்டுவிட்டு வருகின்றேன் என்று கூறிவிட்டு சென்றுள்ளான். இதன் பின்னர் மாணவனைக் காணவில்லை என்றதும், நண்பர்கள் ஊரில் உள்ளவர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். ஊரவர்கள் தேடுதல் நடத்தி ஒரு மணி நேரத்தின் பின்னர் மாணவனை சடலமாக மீட்டனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஒ.5,60)

கொழும்பில்...

விரைந்து செயற்பட்ட பொலிஸார் புத்தர் சிலைகளை மீட்டுள்ளனர்.

உந்துருளியில் வந்த கும்பல் புத்தர் சிலைகளை அங்கு வீசி விட்டுச் சென்றதை நேரில் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த தகவலை அறிந்த பிக்குமாரும் அந்தப் பகுதிக்கு சென்றமையால் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இதுவொரு திட்டமிட்ட இனவாத செயல் என்றும் இந்த நாசகார வேலையில் ஈடுபட்ட இனவாதிகளை உடனடியாக கைது செய்யுமாறும் பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நாரஹேன்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

சிந்திக்க வைக்கும் கேலிச்சித்திரங்கள்



அறிவின்மை கேவலம். அதைவிடக் கேவலம் அறிய மனமில்லாமை.

செஸ்டர்பீல்டு.

மனித வாழ்வு என்பது தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது.

தாகூர்.

நாம் கற்றுக் கொண்டதைப் போற்ற வேண்டும். எமக்குத் தெரிந்தவற்றை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மூர்.

சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு செய்தால் எந்த வேலையும் மிகக் கடினமானதாக இருக்காது.

ஹென்றி போர்ட்.

நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் ஒரே மலிவான மருந்து.

கௌலி.

கொஞ்சம் கொஞ்சமாக நான் தேர்ந்தெடுத்துத் திரட்டிய நூல்களே என் அறிவுக்கு அடித்தளம் அமைத்தன. எனக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிப்பவை புத்தகங்களே.

கிப்பன்.

ஜிப்ரான் இசையில் பாடிய சிவகார்த்திகேயன்

தமிழ்சினிமாவில் முன்னணி நடிகராகவலம்வருபவர்சிவகார்த்திகேயன். இவர் நடிகர், தயாரிப்பாளர், பாடலாசிரியர், பாடகர் என பல அவதாரங்களில் ஜொலித்து வருகிறார். தற்போது இவர் ஜிப்ரான் இசையமைத்து வரும் 'சிக்சர்' என்ற படத்துக்காக ஒரு பாடலை பாடியுள்ளார்.

இதுகுறித்து ஜிப்ரான் தனது சமூகவலைத்தளத்தில், 'சிக்சர்' படத்துக்காக சிவகார்த்திகேயன் பாடிய பாடல் ஒன்றை பதிவு செய்துள்ளோம். "நீ எங்கவேனா கோச்சிக்கினு..." என தொடங்கும் இந்த பாடலை பாடிக்கொடுத்த சிவ கார்த்திகேயனுக்கு நன்றி என்று ஜிப்ரான் தெரிவித்துள்ளார். இந்தப் பாடல் மீது தற்போதே எதிர்ப்பார்ப்பு அதிகரித்துள்ளது.

VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு **யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம்** பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- **சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்**
  G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம்
  ஏனையோர் ஐதாம்தர டிப்ளோமா மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)
- **கணினிப்போதனாசிரியர்**
  NVQ Level - 3 or 4 தகமைக்கு முன்னுரிமை வழங்கப்படும்
  (பயிலுனர்களும் விண்ணப்பிக்கலாம்)
- **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்** ● **அலுவலக உதவியாளர்**
  குறித்த துறையில் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை 7 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இலக்கம். JF/1010
உதயன் பப்பிளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தன் தந்தை சொன்னது
சரிதான் என்று ஒரு
மகன் உணரும் பொழுது
அவன் சொல்வது தவறு
என்று உணரும்
வயதுப்பிள்ளை
அவனுக்கு இருக்கிறான்

கணவர் : ஆறுமணி நேரமா எங்கடி போனா?
மனைவி : ஷாப்பிங் போனேங்க..

கணவர் : என்னனென்னா எடுத்த??
மனைவி : "ஒரு ஜிமிக்கியும் 60 செல்பியும்"

தெரிவுக்குழு சக்திமிக்கதாக மாற்றம் பெறுவது அவசியம்

இந்துமதி

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நாட்டின் முதன்மையான பேசுபொருளாக மாறிவிட்டது. தெரிவுக்குழுவின் முன்னால் வழங்கப்படுகின்ற சாட்சியங்கள் பலரைச் சிக்கலுக்குள் தள்ளவல்லன.

முன்னேற்பாடு இருந்திருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம்

முன்னேற்பாடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடிய தாக்குதலைத் தடுத்திருக்க முடியுமென்பது சாட்சியாளர்களின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. முக்கியமான சாட்சிகள் சிலரின் சாட்சியங்கள் அரச தலைவர் மீது குற்றம் சாட்டுவனவாக அமைந்திருந்ததால் அவர் சஞ்சலத்துக்கு ஆளாகியுள்ளதுடன். தெரிவுக்குழுவின் மீது அதிருப்தியும் கொண்டுள்ளார். தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கின்ற உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு அரச தலைவர் விரும்பியபோதிலும் அது கைகூடவில்லை. தெரிவுக் குழுவின் அங்கத்தவர்கள் விரும்பாததே இதற்கான காரணமாகும். அரச தலைவருக்கு இதுவொரு மிகப்பெரிய பின்னடைவாகவே கருதப்படுகின்றது. இந்த நிலையில் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் தலையிடுவதற்கு எவருக்குமே அதிகாரமில்லையெனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததன் வாயிலாக அரச தலைவருடன் மோதலுக்குத் தாம் தயாரென்பதை உணர்த்தி விட்டார். அமைச்சரவைக் கூட்டத்தை ஒத்திப்போடுவதற்கே அரச தலைவரால் முடிந்துள்ளது.

தெரிவுக்குழுவுக்கு சரிவர அதிகாரங்கள் வேண்டும்

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அதிகாரங்கள் தொடர்பாக இதுவரையில் தெளிவு வரவில்லை. குழுவின் முன்பாக அளிக்கப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாக வைத்து எவராவது குற்றம் புரிந்திருந்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இதனால் முடியுமா? என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டதொரு குழு என்பதால் அதன் அதிகாரங்களைக் குறைத்து மதிப்பிட முடியாது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைதாரிகளின் குண்டுத் தாக்குதல்களுடன் அரசியல்வாதிகள் சிலருக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறப்படுவதை அரசு இனியும் மூடிமறைக்கக் கூடாது. தமது அரசியல் சுய இலாபங்களுக்காக அப்பாவி மக்களைப் பலிக்கடாவாக்கும் முயற்சிகளில் எவர் ஈடுபட்டாலும் அவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படவேண்டும். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்கும்போது அரசினால் இது முடியுமா? என்ற சந்தேகமே எழுந்து நிற்கின்றது. குறிப்பாக அரச தலைவரின் நடவடிக்கைகள் இவ்வாறான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

ஹிஸ்புல்லாவுக்கு என்ன நடவடிக்கை?

அண்மைக்காலமாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவின் பெயர் ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இதற்கு இவரது சர்ச்சைக்குரிய கருத்துக்களும் நடவடிக்கைகளும் காரணமாக அமைந்துவிட்டன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படுமானால் அங்கு குருதி ஆறு ஓடுமெனக் கூறியவர்தான் இந்தக் ஹிஸ்புல்லா. அது மட்டுமல்லாது அவ்வப்போது தமிழர் விரோதக் கருத்துக்களையும் இவர் வெளியிட்டுவந்துள்ளார். கடந்த அரச அதிபர் தேர்தலில் மைத்திரியை எதிர்த்து மகிந்தவுக்கு ஆதரவு கொடுத்தார். இதனால் இவரை முதலில் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்த அரச தலைவர் பின்னர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமித்தார். குண்டுத்தாக்குதல்களின் பின்னர் இவரைப் பதவி விலக்குமாறு பல்வேறு தரப்பிலிருந்தும் அழுத்தங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அரச தலைவர் அவற்றையெல்லாம் செவிமடுக்கவில்லை. பின்னர் பௌத்த தேரர்களின் கடுமையான எதிர்ப்புக் காரணமாகவே ஹிஸ்புல்லா வின் பதவி பறிபோனது. அதற்குப் பின்னரும் அவர் அரசை எச்சரிக்கும் வகையில் சில கருத்துக்களை வெளியிட்டார். "உலகில் நாம்தான் பெரும்பான்மை இனத்தவர். இங்கே எம்மை எவருமே அடக்கி விட முடியாது" "முஸ்லிம் நாடுகள் நினைத்தால் எரிபொருள்களுக்கு நாம் அதிக விலை கொடுக்க நேரிடும்" என்றெல்லாம் வாயில் வந்ததையெல்லாம் அவர் கூறினார். ஆனால் ஆட்சியாளர்கள் இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இவரைப் போன்றவர்களை உயர் பதவிகளில் அமர வைப்பது என்பது மிகப்பெரிய கேடுகளுக்கு வழிவகுத்துவிடும். இவருக்கு எதிராகத் தெரிவுக்குழு முன்பாக அளிக்கப்பட்ட சாட்சியங்களுக்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஆனால் தெரிவுக்குழுவுக்கு எதிரான போக்கையே அரச தலைவர் கொண்டுள்ளார். இதனால் அந்தக் குழுவின் முன்பாக இடம்பெற்ற விசாரணைகள் பயன்தரக்கூடிய வகையில் அமையுமா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொல்லப்பட்ட மற்றும் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு எதோவொரு வகையில் நீதி வழங்கப்படவேண்டும். இதற்கும் காரணமானவர்களும் இந்தச் சம்பவம் இடம்பெறுமெனத் தெரிந்தும் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்தவர்களும் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். இதற்கான சக்தி தெரிவுக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம் பெற்ற தற்கொலைதாரிகளின் குண்டுத் தாக்குதல்களுடன் அரசியல்வாதிகள் சிலருக்கும் தொடர்பு இருந்ததாகத் கூறப்படுவதை அரசு இனியும் மூடிமறைக்கக் கூடாது. தமது அரசியல் சுய இலாபங்களுக்காக அப்பாவி மக்களைப் பலிக்கடாவாக்கும் முயற்சிகளில் எவர் ஈடுபட்டாலும் அவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படவேண்டும். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்கும்போது அரசினால் இது முடியுமா? என்ற சந்தேகமே எழுந்து நிற்கின்றது.

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
செய்திகள்

09
திங்கட்கிழமை 17 ஜூன் 2019

பொலிஸாருக்கு
குடும்ப விவரங்கள் வழங்க முடியாது
எழுத்தில் பதிலளித்தார் அரச அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 17

அவசரகால சட்ட ஏற்பாடுகளின் கீழ், குடும்ப விவரங்களைப் பதிவு செய்யப் பொலிஸார் வழங்கிய படிவத்தில் 'தகவல்களை வழங்க முடியாது' என்று எழுத்தில் பதில் வழங்கியுள்ளார் அரச அதிகாரி ஒருவர். இந்தச் சம்பவம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அவசரகால சட்ட ஏற்பாடுகளின் கீழ், குடும்ப விவரங்களைப் பொலிஸார் பதிவு செய்து வருகின்றனர். கிராம அலுவலர்கள் ஊடாக, பொலிஸ் பதிவு விண்ணப்பத்தை குடியிருப்பாளர்களுக்கு வழங்கி அதனைப் பதிவு செய்கின்றனர்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவில் அரச அதிகாரி ஒருவருக்கும் கிராம அலுவலர் மேற்படி விண்ணப்பத்தை வழங்கியுள்ளார்.

பொலிஸார் விவரங்கள் கோருவது சட்டவிரோதமானது என்றும், அந்த விவரத்தை வழங்க முடியாது என்றும் தெரிவித்த அரச அதிகாரி, 'விவரம் வழங்க முடியாது' என்று வழங்கப்பட்ட படிவத்தில் எழுதியுள்ளார். அதனை கிராம அலுவலரிடம் ஒப்படைத்துள்ளார். (ஒ.5,105)

திக்கம் வடிசாராய தொழிற்சாலை மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பம்
வடக்கு அபிவிருத்தி அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

திக்கம் வடிசாராயத் தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்புவதற்கும் நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழிநுட்பத்தை மேம்படுத்துவதற்கும் 185 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, மறுசீரமைப்புப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

30 ஆண்டு காலப் போரால் திக்கம் வடிசாராயத் தொழிற்சாலை கவனிப்பில்லாமலும் பராமரிக்கப்படாமலும்; இருந்ததுடன் காலங்கடந்த பழைய உபகரணங்கள், இயந்திரங்கள் பழுதடைந்த உதிரிப்பாகங்கள் பழைமை வாய்ந்த தொழிநுட்பங்கள் காரணமாக தொழிற்படாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக சாராயம் மற்றும் மதுசாரம் போன்ற உற்பத்தி பொருள்களின் தரம் குறைவாகக் காணப்படுவதுடன் உற்பத்திசெலவும் உயர்வாகக் காணப்படுகின்றது. பதனீர் மற்றும் கள்ளு சார்ந்த சாராயத்துக்கு மேலதிகமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வேறு உற்பத்தி பொருள்களான மதுசாரம், மற்றும் எதனோல் போன்றவற்றை உற்பத்தி செய்ய முடிவதில்லை.

சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தும் ஸ்பிரிட் போன்ற பொருள்களுக்கு மருத்துவமனைகள் மற்றும் மருந்துகளை தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து உள்ளூரிலும் வெளிநாட்டிலும் அதிக கேள்வி காணப்பட்டது. மேலும் வெளிநாடுகளில் வாழும் இடம்பெயர்ந்தவர்களிடமிருந்து பனைசார் சாராய உற்பத்திகளுக்கு அதிகமான கேள்வி காணப்படுகின்றது.

பனைசார் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள்களுக்கு அமைவாக அமைச்சினால் இந்தத் தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பதனீர் மற்றும் கள்ளு இறக்கும் குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்கீழ் வாழ்பவர்களாக காணப்படுவதுடன் முழுமையாக பனைசார் வாழ்வாதாரத்திலேயே தங்கியவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ் வடிசாராய தொழிற்சாலையை மீளக்கட்டியெழுப்புவதற்கும் நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழிநுட்பத்தை மேம்படுத்துவதற்கும் 185 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மறுசீரமைப்பு பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நவீன உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழிநுட்பத்தை மேம்படுத்துவதற்கான கேள்வி கோரல்கள் கோரப்பட்டு மதிப்பீடுகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இந்தத் தொழிற்சாலையை நவீன இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் தொழிநுட்பத்துடன் இவ்வருட இறுதிக்கு முன் ஆரம்பிப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது.

இம்முன்னெடுப்பானது கள்ளு இறக்கும் குடும்பங்களினதும் அது சார்ந்த உற்பத்திகளில் தங்கியிருக்கும் குடும்பங்களினதும் நீண்டகால தேவையையும் எதிர் பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யும். விரயமாகும் கள்ளினை பெறுமதி சேர்க்கப்பட்ட பொருள்களாக மாற்றுவதன் மூலம் பனை வளங்கள் உச்சமாக பயன்படுத்தப்படுதல் உறுதி செய்யப்படும் என்றுள்ளது. (ஒ.5)

ஸஹ்ரானுடன் தொடர்பாம் இளைஞன் கைது

வெலிமடையில் 21 வயது இளைஞன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். தேசிய தௌஹீத் ஜமாத் தலைவர் ஸஹ்ரானுடன் தொடர்பில் இருந்தார் எனக் கூறியே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெலிமடை பொலிஸார் இவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

புட்டினுடன் மைத்திரி 20 நிமிடங்கள் பேச்சு!

கொழும்பு, ஜூன் 17

ரஷ்ய அரச தலைவர் விளாடிமிர் புட்டினுக்கும் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் 20 நிமிடங்கள் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தஜிகிஸ்தான், துஷன்பே மாநாட்டு மண்டபத்தில் ஆசியாவின் கூட்டுச் செயற்பாடு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் பற்றிய அமைப்பின் ஐந்தாவது மாநாட்டில் கலந்துகொண்டபோதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்தும், பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சில பொருள்கள் மீது அமெரிக்காவால் வர்த்தகத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

மேலும், மிக விரைவில் இலங்கைக்குப் பயணத்தை மேற்கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரஷ்ய அரச தலைவர் விளாடிமிர் புட்டினுக்கு அழைப்பு விடுத்தார். (ஒ.5,22)

யாழ். பல்கலை
கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்ப 424 பேரின் விவரங்களை அனுப்பியது அமைச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் காணப்படும் கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 424 பேரின் விவரங்களை உயர் கல்வி அமைச்சு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களின் விவரங்களே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

பல்கலைக் கழகங்களில் நிலவும் சில பதவிகளுக்கான பெயர்கள் உயர் கல்வி அமைச்சினூடாகவே பரிந்துரைக்கப்படவேண்டும் என்ற 876ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக, யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைக்கு அமைவாக, கிடைக்கப்பெற்ற பெயர் விவரங்களில் 424 பேரின் விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி நேரடியாக பெற்றுச் சென்றுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு 115 பேரும், நூலக தகவல் உதவியாளர் பதவிக்கு 19 பேரும், நூலக உதவியாளர் (தரம் 2) பதவிக்கு 8 பேரும், அலுவலக உதவியாளர் பதவிக்கு 109 பேரும், கவனிப்பாளர் பதவிக்கு 4 பேரும், ஆய்வு கூட உதவியாளர் பதவிக்கு 150 பேரும், இறைச்சி வெட்டுபவர் பதவிக்கு ஒருவரும், பாதுகாப்பு ஊழியர் பதவிக்கு 15 பேரும், முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியக் காப்பாளர்) பதவிக்கு 3 பேரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் அடிப்படையில் உயர்கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலர் எம். ஏ. ஐ. கே. மந்திரிரத்னாவினால் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 137பேர் முஸ்லிம்கள் என்று கூறப்படுகின்றது. (ஒ.5,105,106)

இரண்டாம் தவணைப் பரீட்சை ஜூலை 15ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஜூலை மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்று மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிற்றுத் தாக்குதலை அடுத்து நாடெங்கும் உள்ள பாடசாலைகளில் இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்று வருகின்றன. வடக்கு மாகாணப் பாடசாலைக ளின் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஜூலை மாதம் 15ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளன. 6 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரையிலான மாணவர்க ளுக்கு ஜூலை 15ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பிக்கப் பட்டு 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையும். தரம் 3 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு ஜூலை மாதம் 24ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பமாகி 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையும்.

தரம் 9 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களுக்கான விஞ்ஞான மற்றும் அழகியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை ஜூலை மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகி 12ஆம் திகதி நிறைவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)



கொய்யாத்தோட்டத்தில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டப் பகுதியில் கட்டட மொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஒரு தொகுதி வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டன.

சுமார் 9 மின்னேற்றிகளும் 5 டெட்டனேற்றர் குச்சிகளும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த வெடிபொருள்கள் சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தும் நோக்கில் மறைத்து வைக் கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

ஆரம்பப் பிரிவு மாணவர்களது விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன

சாவகச்சேரி, ஜூன் 17

பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் கற்கும் அனைத்து மாணவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சால் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் தொடர்பான பதிவுகள் நாளை முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பாடசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-9)

மணல் கடத்தல்காரருக்கு மாணவர்களும் உடந்தை

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூன் 17

மணல் அகழ்வைத் தடுக்க ஒருசில பொதுமக்கள் முன்வருகின்ற போதிலும் கடத்தல் காரர்களுக்குப் பாடசாலை மாணவர்களும் உந்துருளிகளில் வருவோரும் ஒத்து ழைப்பதால் மணல் கடத்தலை முழுமையாகக் கட்டுப்படுத்த முடிவதில்லை - என்று தெரி வித்தார் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தலைமைப்பீட பொறுப்பதிகாரி.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச் சேரி, கொடிகாமம் போன்ற இடங்களில் பொலிஸ் நிலையங்கள் உள்ளன தென் மராட்சி கிழக்கு, தென்மராட்சி தெற்கு ஆகிய பகுதிகளில் மணல் அகழ்வு அதிகமாக நடைபெறுகிறது. மணல் அகழ்வினைத் தடுக்க மக்கள் எமக்குத் தகவல்கள் அனுப்புகின்றனர். அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேவேளையில் வேறு சிலர் கடத்தல் காரர்களுக்கு உதவும் வகையில் தகவல் களை வழங்கி எமது செயற்பாட்டினை மழுங்கடிக்கச் செய்கின்றனர். கடத்தல் காரர்களுக்கு தகவல் வழங்குபவர் களை இனங்கண்டு எமக்குத் தெரிவித் தால் அவர்களைத் தண்டிப்பதன் மூலம் கடத்தல் இடம்பெறுவதைத் தடுக்க முடி யும். கடத்தல்காரர்களுக்கு உதவுவதில் பாடசாலை மாணவர்கள் சிலரும் ஈடுப டுகின்றனர்.

மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொது மக்கள் அறிவிக்கும்போது அங்கு நாம் செல்கையில் சாலையோரங்களில் நிற் கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பணத்துக்காக நாம் வரு வதை கடத்தல்காரர்களுக்குத் தெரிவிப் பதால் எமது கடமைகளை நிறைவேற்ற முடியாமல் உள்ளது.

மாணவர்களுக்கு பணத்தாசையை உருவாக்கி இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட வைக்கின்ற னர். இது அவர்களின் எதிர்காலத்தை பாழடித்துவிடும் என்பதை பெற்றோர் மறந்து விடக்கூடாது.

பெரிய இடப்பரப்பைக் கொண்ட தென்ம ராட்சி பிரதேசத்தில் இரு இடங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஆள ணிப் பற்றாக்குறை மற்றும் வாகனப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இவற் றினை நீக்க இணைத் தலைமை நட வ டிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

பிரதேசத்தில் பெரும் எடுப்பில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. பொலிஸ் நிலையங்களில் பொலிஸா ரின் எண்ணிக்கை குறைவாக உள்ள தால் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படு கிறது. அவ்வாறாயின் படையினரின் உதவியினைப் பெற்று கட்டுப்படுத்த முடியும் என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கு.சர்வானந்தன் கருத்துத் தெரிவித்தார்.

பொலிஸாருக்குஏற்படும்பிரச்சினைகள் தெரியாத பொதுமக்கள் பொலிஸாரு டன் அரசியல்வாதிகளும். இணைந்து செயற்படுகின்றனர் எனக் குற்றம் சுமத் துகின்றனர்.

மணல் அகழ்வு தொடர்பாகப் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் அரச தலை வருக்கும் அறிவித்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லை.

பிரதேச செயலர் அடிக்கடி அங்கு வந்து நிலமையைப் பார்வையிடுகின்ற போதி லும் அவரால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை என சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூ ரன் தெரிவித்தார். (ம-9,131,159)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் திறன் வகுப்பறை திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 17

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் திறன் வகுப்பறை திறந்து வைக்கப் பட்டது.

ஐக்கிய இராச்சியத்தில் இயங்கும் ரட்ணம் பவுண்டேசன் அமைப் பின் நிதிப்பங்களிப்பில் உருவாக் கப்பட்ட திறன் வகுப்பறை மாண வர்களின் கற்றல் செயற்பாடுக ளுக்கு அண்மையில் கையளிக்கப் பட்டது. கல்லூரி அதிபர் தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில் விருந் தினராக வடக்கு மாகாண சபை யின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித் தார்த்தனின் இணைப்பாளரு மான பா.கஜதீபன் கலந்து கொண் டார். பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை, சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் நட ராஜா, சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் ஆகி யோரும் நிகழ்வில் கலந்து கொண் டனர். (ம)

கொவ்வைக்குளம் சீரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 17

வலிகாமம்மேற்குநீச்சாமம்கிராமத்தில் உள்ள கொவ்வைக்குளத்தின் சீரமைப் புப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட் டன. எழுச்சித் திட்டத்தின் கீழ் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் நிதியொதுக்கீட்டில் கிராமத்து மக்களின் கோரிக்கைக்கு அமைய இந்தக் குளம் சீரமைக்கப்படு கிறது. (ம-7)

கூட்டுறவு சங்கத்தின் செயற்பாடுகளை விரிவாக்க கடன்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் அனலைதீவு பலநோக் குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடு களை விரைவுபடுத்தும் நோக்கில் கடன் வசதியைப் பெற்று வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் கூட்டுறவு நிதிக் கட னாக பத்து லட்சம் ரூபா வழங்கி வைக் கப்பட்டுள்ளது. சங்கத்தின் செயற்பாடுகள் அபிவிருத்தி போன்றவற்றை கருத்தில் கொண்டு இந்தக் கடன் உதவி வழங்கப் பட்டுள்ளது என்று கூட்டுறவு அபிவிருத் தித் திணைக்களம் தெரிவித்தது.

இந்தச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் மற்றும் இரண்டு கிளை நிலை யங்கள் போன்றவற்றின் வியாபாரத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. (ம-17)



மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இதில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

அச்சுவேலி – மூளாய் இடையே சிற்றூர்திச் சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
அச்சுவேலி - மூளாய் சிற்றூர்தி சேவை நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.
மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த வழித்தடம் 773 இலக்க மூளாய் அச்சுவேலிக்கான சிற்றூர்திச் சேவை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. (ம)

மழையுடனான காலநிலை தொடர்ந்து நீடித்திருக்கும்

வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
நாட்டில் கடந்த சிலநாள்களாக நிலவிவரும் மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளது.
மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
அத்தோடு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பலதடவைகள் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.
கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகல் வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்றும், மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

வவுனியாவிலுள்ள குளங்களில் பெருந்தொகை மீன்கள் இறப்பு

காரணம் இன்று கண்டறியப்படும் என்று நீரியல்வளத்துறைத் திணைக்களம் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 17
முல்லைத்தீவு, மன்னாரைத் தொடர்ந்து வவுனியாவிலும் ஏராளமான மீன்கள் ஒரே தடவையில் இறந்து போயுள்ளன. வவுனியா புதுக்குளம், மூனாமடுக்குளங்களில் நேற்று அதிகாலையில் இருந்து மீன்கள் இறக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் வறட்சி பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் வடக்கு மாகாணத்தில் மற்றைய நான்கு மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது வவுனியா மாவட்டத்தில் வறட்சியின் பாதிப்புக் குறைவாகவே இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தால் கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கும்போது மீன்கள் ஏன் இறந்தன என்று கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.
சிறுபோக நெற் செய்கைக் காகப் புதுக்குளம், மூனாமடுக்குளத்திலிருந்து அதிகளவிலான தண்ணீர் பெறப்படுகின்றது. எனவே குளத்தின் தண்ணீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் மீன்கள் இறக்க நேரிட்டுள்ளனவென்று கருத்துக்கள் கூறப்படுகின்றன.
எனினும் மீன்கள் இறந்ததற்கான சரியான காரணத்தை வவுனியா மாவட்ட நீரியல்வளத்துறைத் திணைக்களம் கண்டறியவில்லை. இன்றைய தினமே அதற்கான காரணம் தெரியும் என்று தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு, நந்திக்கடல் மற்றும் மன்னாரில் உள்ள குளங்களில் அண்மைக் காலங்களில் மீன்கள் பெருவாரியாக இறந்து போயிருந்தன. அதற்கான காரணம் தண்ணீர் சூடாகியதே என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
வவுனியாவில் பெருவாரியாக மீன்கள் இறக்கின்றமை நன்னீர் மீன வர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறு மீன்கள் முதல் பெரிய மீன்கள் வரை இறந்து கரையொதுங்கியுள்ளன.
எனவே அந்தக் குளங்களில் மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (த-21)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள பெயர்ப் பலகை.

மணிக்கூட்டு கோபுரம் திறப்பு

வடமராட்சி, ஜூன் 17
வடமராட்சி கிழக்கு உடுத்துறை வடக்கு 9ஆம் வட்டாரத்தில் உள்ள முத்தத்துப்பத்து பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக்கோபுரம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளர் அரிய குமாரின் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கிராம எழுச்சித் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கி குறித்த மணிக்கூட்டுக் கோபுரத்தை அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-70)

விக்கி தலைமையில் புதிய கூட்டு உருவாகும்

ஆனந்தன் எம்.பி. கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூன் 17
முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டு உருவாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் தேர்தல்களில் விக்னேஸ்வரன் தலைமையில் தேர்தல் கூட்டொன்று சேரும். அது மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைச் செலுத்தும். நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக 65 வீதமான வாக்குகள் கிடைத்துள்ளன. தமிழ் அரசுக் கட்சி மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்தி தமிழ் அரசுக் கட்சி தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது என்று தெரிவித்த சிவசக்தி ஆனந்தன்,
பல சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு முண்டுகொடுத்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.
தற்போதுள்ள அரசின் காலத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் செயற்பாட்டுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் எதிர் கட்சி தலைவராகச் செயற்பட்ட காலத்துக்கும் உள்ள வித்தியாசத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? என்று செய்தியாளர் கேட்டார். அதற்குப் பதிலளித்த ஆனந்தன்,
தற்போதுள்ள எதிர்க்கட்சித் தலைவர் தமது கட்சி அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல வேண்டும் என்ற நோக்கோடு அரசைக் கடுமையாக விமர்சித்தும், பல்வேறு சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தியும் வருகிறார். ஆனாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சந்தர்ப்பத்தில் அரசின் அத்தனை செயற்பாடுகளுக்கும் ஒத்து ஊதும் வகையில் நடந்துகொண்டார்.
ஒரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றில் சம்பந்தனைப் பார்த்து தலைமை அமைச்சரே பாராட்டிய சம்பவத்தையும் கூறவேண்டும் - என்றார்.
தற்போது தேர்தல் ஒன்று நெருங்குகின்ற போது கிராம எழுச்சி, சமூர்த்தி போன்றவற்றின் ஊடாக மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது என்றும் அவர் சாடினார். கிராம எழுச்சித் திட்டத்தில் 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு கிராமங்களின் அபிவிருத்திக்கென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் ஒதுக்கப்பட்டது. கடந்த வருட இறுதியில் மைத்திரிபால சிறிசேனவும் மகிந்தராஜபக்சவும் அரசியல் புரட்சி செய்தபோது கூட்டமைப்பு ரணில் பக்கம் நின்றிருந்தது. சிவசக்தி ஆனந்தன் ரணிலுக்கு ஆதரவளித்திருக்கவில்லை. அதனால் அவருக்குக் கிராம எழுச்சித் திட்டநிதியை ரணில் விடுவித்திருக்கவில்லை. இந்த நிலையில் தேர்தல் ஒன்று நெருங்குகின்ற போது கிராம எழுச்சி, சமூர்த்தி போன்றவற்றின் ஊடாக மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார். (த-6)

இயக்கச்சிப் பொதுச் சந்தையில் மின்னின்றி வியாபாரிகள் அவதி

கிளிநொச்சி, ஜூன் 17

இயக்கச்சிப் பொதுச் சந்தையில் மின்சாரம் இன்மையால் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்று வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டது இந்தச் சந்தை. சந்தையில் வியாபாரிகள் வியாபார நடவடிக்கை களை ஆரம்பித்து இரண்டு வருடங் கள் கடந்துள்ளன.

இதுவரை அதற்கான மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. இதனால் கருவாடு வியாபாரிகள் உள் ளிட்ட சிலர் மாலை 6 மணியுடன் கடைகளைப் பூட்டிவிட்டுச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மின்சார இணைப்புக் கிடைக்கும் பட் சத்தில் 8 மணிவரை தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடி யும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பச்சிலைப்பள்ளிப் பிர தேச சபைத் தவிசாளரிடம் கேட்ட போது, "குறித்த கடைகள் தற்காலிக வாடகைக்கு வழங்கப்படவில்லை, நிரந்தர வாடகைக்கு வழங்கப்பட் டுள்ளன.

குறித்த கடைகளை அவர்களின் உற வுகள் தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதியே வழங்கப்பட்டுள்ளது. கடைகளுக்கு மின்சார இணைப்புக் கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெறின் நடவ டிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித் தார். (த-6)

முகத்தான்குள வீதி சீரமைக்கப்படுகிறது

மன்னார், ஜூன் 17

பல வருடங்களாகச் சீர்செய்யப்படாமல் இருந்த செட்டிக் குளம் முகத்தான் வீதி தற்போது சீரமைக்கப்பட்டு வருகிறது.

செட்டிகுளம், முகத்தான் குளம் வீதி பல வருடங்களாகச் சீரமைக்கப்படாமல் இருந்தது. இதனைச் சீர்செய்து தரு மாறு அந்தக் கிராமத்து மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமை வாக வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் 10 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் மேற்படி வீதி சீரமைக்கப்படுகிறது. (ம-213)

35 லீற்றர் கசிப்பு பளையில் மீட்பு!

கொடிகாமம், ஜூன் 17

புத்தூர் சந்தியில் வைத்து 35 லீற்றர் கசிப்பு நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதானார். மற்றொரு சந்தேக நபர் தப்பியோடினார்.

பளைப் பகுதியிலிருந்து சாவகச்சேரி நோக்கி உந்துருளியில் கசிப்புக் கொண்டு செல்லப்படுகிறது என்று பொலிஸாருக் குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து புலனாய்வுப் பொலிஸார் மேற் கொண்ட அதிரடி நடவடிக்கையின் பய னாகவே மேற்படி கசிப்பு மீட்கப்பட்டது. அதைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதானவர் சாவகச்சேரி நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)



வட்டுவாகல் சப்த கன்னிமாரின் உற்சவகாலப் பொங்கல் இன்று

கலைநிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 17

வட்டுவாகல் அருள்மிகு சப்த கன்னி மார் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவ நிகழ்வுகள் ஆரம்பமாகி சிறப் புடன் நடைபெற்று வருகின்றன. இன்று பொங்கல்விழா வெகுசிறப் பாக இடம்பெறவுள்ளது என்று அறி விக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, வட்டுவாகலின் முத் தாக நந்தியாற்றங்கரையிலே பாலத் துக்கு அண்மையான முச்சந்தியின் அருகாமையில் அமைந்துள்ள திருத் தலமே வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயம் ஆகும். இந்தப்பதியில் முழு முதற் கடவுளராக சப்த கன்னிமார் கள் வட்டுவாகல் கிராம மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின் றார்கள். சிறப்பாக ஆகமம் சாரா முறையிலே இவ்வாலயத்தில் வழி பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

அம்மனுக்கு திங்கட்கிழமை தோறும் சிறப்பு வழிபாட்டுப் பூசைகள் இடம் பெறுவதுடன், வருடாந்தம் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமித் தீங் களன்று பாரம்பரிய பண்பாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு கோலாகலமாக பொங்கல் நிகழ்வு கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த வகையில் இந்த ஆண்டு பொங்கல் உற்சவம் அண்மையில் ஆரம்பமானது. கடந்த நான்காம் நாள் பொங்கல் உற்சவத்தின்போது சப்த கன்னியருக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சிறப்புப் பூசை முதன்மை பூசகரினால் இடம் பெற்றுப் பிரசாதங்கள் வழங்கப் பட்டன.

வடக்கு பகுதியிலிருந்து பெருமளவி லான பக்த அடியார்கள் கலந்து சப்த கன்னியரின் அருளாசிகளைப் பெற்று, அதன்பின்னர் இடம்பெற்ற மதிய அன்னதான நிகழ்விலும் கலந்துகொண்டிருந்தனர்.

ஏழாம் நாளான இன்று நடைபெறு கின்ற இறுதி நாள் நிகழ்வில் இலங் கையின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான பக்த அடியார் கள் கலந்து சப்த கன்னிமாரின் அரு ளாசியைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து ஏற்பாடுகளையும் ஆல யப் பரிபாலான சபையினரும் கிராம மக்களும் மேற்கொண்டுள்ள னர்.

இறுதி நாள் நிகழ்வில் கலை நிகழ்வு களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள் என என்று தெரியவருகிறது. (ம-21)

வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட மாடுகள் இறைச்சியாக்கப்பட்டன

பளை பொலிஸ் நிலையத்தில் இவ்வாறு முறைப்பாடு பதிவு

கிளிநொச்சி, ஜூன் 17

வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட இரு மாடுகள் இறைச் சியாக்கப்பட்டுள்ளன என்று பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மக் கேணியில் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு மாடுகள் கடத்திச் செல்லப்பட்டு இறைச்சியாக்கப்பட்டுள்ளன. காற்றாடிக்கு அண்மையில் உள்ள காட்டுப் பகுதியில் எச்சங்கள் வீசப்பட் டுள்ளன என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)

அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிகள் கைது

கிளிநொச்சி, ஜூன் 17

கடந்த ஒரு வாரத்தில் அனுமதியின்றி மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டில் 3 டிப்பர்கள் மற்றும் 4 உழவியந்திரங்கள் என்பன மடக்கப்பட்டுள்ளன. அவற்றின் சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுப் பலருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளாலி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய மூன்று உழவியந் திரங்களுடன் அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

புலோப்பளை பகுதியில் அனுமதிப்பத்தி ரமின்றி மணல் ஏற்றினாரென்று உழவி யந்திர சாரதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கும் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இயக்கச்சி மற்றும் சோரன்பற்று பகுதி யில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பரில் மணல் ஏற்றிய சாரதி நீதிமன்றில் குற் றத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கும் 50ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட் டது.

அதேபோல் புலோப்பளை மற்றும் முக மாலை மிதிவெடி அகற்றப்படாத பகுதி யில் நேற்றுமுன்தினம் இரு டிப்பர் வாக னங்களுடன் அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். சாரதிகளுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது. அவர்க ளுக்கு எதிராக நீதிமன்றில் குற்றப்பத்தி ரம் தாக்கல் செய்யப்படும் என்று பளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர் (த-6)

புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் கைலாயப் பிள்ளை விக்னேஸ்வரன் தனது ஐம்பதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு அன்பின்கரம் அறக்கட்டளை ஊடாக முல்லைத்தீவு தேவிபுரத்திலும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியிலும் போரால் பாதிக்கப்பட்ட குடும் பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அண்மையில் வழங்கினார். (ம்-222)

பொசன் தானம் வழங்கல் மன்னாரில் நடைபெற்றது

மன்னார், ஜூன் 17

மன்னாரில் பொசன் தினத்தையொட்டி மன் னார் பொலிஸ் அத்தியட்ச கர் அலுவலகத்தின் ஏற் பாட்டில் கடலை தானம் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மன்னார் பொலிஸ் அத்தி யட்சகர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் முதன்மைப் பாலத்தடியில் நேற்று முற்பகல் தானம் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் இடம் பெற்ற குறித்த இந்த நிகழ்வில் சர்வ மதத்தலைவர் கள் கலந்து கொண்டு ஆசி வழங்கினர்.

பொசன் போயா தினம் நாடு முழுவதும் நேற் றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

அதற்காக வழிபாடுகள், தானம் வழங்கும் நிகழ்வுகள் பல இடங்களில் நடைபெறுவது வழமை. (த-56)

முல்லைத்தீவு பேராற்றில் சட்டவிரோத மண்அகழ்வு

அந்தப்பகுதி மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியால் ஊடறுத்துச் செல்லும் பேராற்றில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது என்று குற்ஞ்சாட்டப்படுகிறது.

பேராறுக் கிராம அலுவலர் பிரிவுப் பகுதியில் காணப்படுகின்ற பேராற்றிலேயே இந்தச் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்தில் எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் மணல் அகழ்ந்து எடுக்கப்படுகின்றது. ஆற்றங்கரையிலே குவித்து வைத்து விட்டு இரவு வேளையிலேயே சட்டவிரோதமாக வாகனங்களில் ஏற்றி வெளி இடங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுகிறது.

எனினும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு திணைக்கள அதிகாரிகளோ அல்லது பொலிஸாரோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பேராற்றில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையை பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்தி தங்களுடைய இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-21)

ஒப்பந்தமெடுத்தும் பூட்டிய நிலையிலிருந்த

குஞ்சுக்குளம் சுற்றுலா விடுதி பாவனைக்குத் திறக்கப்பட்டது

மன்னார், ஜூன் 17

நீண்டகாலமாகத் திறக்காமல் இருந்த குஞ்சுக்குளம் சுற்றுலா விடுதி சுற்றுலாப் பயணிகளின் பாவனைக்காகக் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி அதனைத் திறந்துவைத்தார். அதில் அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாண சுற்றுலா அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதிமூலமாகக் குஞ்சுக்குளம் தேக்கம் தொங்கு பாலத்துக்கு அருகாமையில் சுற்றுலா மையத்துக்கான உணவகம் 2017ஆம் ஆண்டு நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.அன்புராஜ் தலைமையில் அடிக்கல் நடுகை இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 2016 ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் திகதி இதை வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

பின்னர் நானாட்டான் பிரதேச சபையின் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. அன்றைய காலப்பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டபோதும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. தற்போதைய நானாட்டான் பிரதேச சபை நிர்வாகம் ஒப்பந்தத்தை நிறுத்தி மீண்டும் கேள்விகோரல் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் வழங்கி கடந்த ஜூன் 14ஆம் திகதி குஞ்சுக்குளம் சுற்றுலா விடுதி உணவகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த உணவு விடுதியில் சில அடிப்படைத் தேவைகள் செய்யவேண்டியுள்ளன. இந்த இடம் மன்னாரின் சிறந்த சுற்றுலாத்தளமாக இருப்பதனால் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல வேலைத்திட்டங்களை செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் பரஞ்சோதி மேலும் தெரிவித்தார். (கு-213)

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அமரர் நா.வை.குகராஜா சடலம் பொதுமக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து நேற்று அடக்கம் செய்யப்பட்டது. (ம)

காணிக்குள் தடம்புரண்ட பாரவூர்தி சாரதி தெய்வாதீனமாக தப்பித்தார்

முல்லைத்தீவு, ஜூன் 17

பாரவூர்தி ஒன்றின் முன் சக்கரங்கள் கழன்று வீழ்ந்ததில் அந்தப் பாரவூர்தி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை முல்லைத்தீவு மரவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி எரு ஏற்றிக் கொண்டு பயணித்த பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள காணிக்குள் தடம்புரண்டமையினால் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரவூர்தியில் பயணம் செய்த சாரதி உள்ளிட்ட இருவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகி ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சிகிச்சைகாகச் சேர்க்கப்பட்டனர். விபத்து தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-21,500)

ஈருருளி அன்பளிப்பு

முல்லைத்தீவு திருமுறிண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்று வரும் மாணவி செல்வி. த.குமுதினிக்கு ஈருருளி வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்துவரும் தர்மலிங்கம் ராஜ்குமாரின் நிதிப்பங்களிப்புடன் இது வழங்கப்பட்டுள்ளது.

அவர் மூன்று கிலோமீற்றர் தூரம் நடந்து பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வருகின்றார். இவரது கல்விச் செயற்பாட்டை இலகுவாக்க நேற்றுமுன்தினம் ஈருருளி வழங்கப்பட்டது. (கு-222)

கிளிநொச்சி மாவட்டத்தோடு இரண்டறக் கலந்தவர் குகராஜா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல்

கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி மண்ணோடும், இந்த மாவட்ட மக்களின் வாழ்வியலோடும் இரண்டறக்கலந்து இறுதிவரை மண்ணுக்காகவும், மக்களுக்காகவுமே வாழ்ந்திருந்த ஒரு தமிழ்த்தேசியப் பற்றாளன் குகராஜாவை இன்று இழந்து நிற்கிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகம் இரங்கல் தெரிவித்துள்ளது.

அறிவகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு மண்ணை பூர்வீகமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரம் கிராமத்தை வாழ்விடமாகவும் கொண்டு இளவயது முதலே சமூகப் பணிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மறைந்த அமரர்.வைத்திலிங்கம் குகராஜாவின் வாழ்க்கைப் பாங்கு பலருக்கும் முன்னுதாரணமானது.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது கதிரவேலு அப்புவுடன் இணைந்து பல கிராமங்களின் உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்த இவரை ஒட்டுமொத்த உருத்திரபுரம் மண்ணைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு தனி அடையாளம் என்றே கூறலாம். கூட்டுறவாளனாக, கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவனாக, கிளிநொச்சி மாவட்ட ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகத்தின் செயல் இயக்குநராக, இலக்கியவாதியாக, மேடைப் பேச்சாளனாக, ஆன்மீகவாதியாக, கல்வியாளனாக, சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதியாக அறியப்பட்ட இவர் இறுதிப் போரின் பின்னர் இந்த மண்ணில் அடக்குமுறைகளும், அடாவடித்தனங்களும் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த, உரத்துப் பேசுவதற்கே உரிமை மறுக்கப்பட்டிருந்த 2010 களில் தமிழர்களின் உரிமை சார்ந்தும், உணர்வு சார்ந்தும், இன விடுதலை சார்ந்தும், தமிழ்த் தேசியம் சார்ந்தும், கொள்கைத் திடத்துடன் பயணித்திருந்தது வரலாறு.

அப்படிப்பட்டதொரு அடக்குமுறை நிறைந்திருந்த சூழலில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் கரைச்சி பிரதேச சபையின் வேட்பாளராகப் போட்டியிட்டு, பல தசாப்த காலங்களுக்குப் பின்னர் கட்டமைக்கப்பட்ட கரைச்சி பிரதேசசபையின் தவிசாளராக ஒட்டுமொத்த மக்களாலும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். சபை வலுவிலிருந்த நான்கு வருடங்களும் மக்களுக்கு ஆற்றியிருந்த தன்னலமற்ற பணியும், அரசின் அடிவருடிக் கட்சிகளின் கொள்கையற்ற செயற்பாடுகளை எல்லாம் முறியடித்து சபையை நடத்திச்சென்ற நிர்வாகத் திறனும், பொதுமக்களுடனும், அலுவலர்களுடனும் அவர் கொண்டிருந்த நல்லுறவும், எதிர்த்தரப்பினர் மீதுகூட கடுமை காட்டத் தெரியாத பண்பும், அந்தக் காலப்பகுதியில் கட்சியின் மாவட்டக் கிளை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை எதிர்கொண்டும், எதிர்த்தும் அவர் செயற்பட்ட விதமும், கட்சி மீதும், கட்சியின் கொள்கை மீதும் அவர் கொண்டிருந்த தீராக்காதலுமே பதவிநிலைகளைக் கடந்து, அவரை அறிந்த அத்தனைபேர் மனங்களிலும் 'மணியண்ணையாய்' அவர் நிலைகொள்ளக் காரணம்.

எப்போதும் சிரித்த முகம், மனைதைப் போலவே தோற்றத்திலும் பேணிவந்த வெண்மை, மனதாலும் பிறர்க்கு தீங்கு நினைக்காத கருணை உள்ளம், நேரிய சிந்தனையாற்றல், செயற்றிறன், இலக்கிய ஆர்வம், பேச்சுவன்மை, பணிவு, நிர்வாகத்திறன், இன, மொழிப்பற்று, சேவைநோக்கு, தன்னலமற்ற அரசியற் பார்வை என தனக்குத்தானே வரித்துக் கொண்ட வாழ்க்கைப் பாதையிலிருந்து சற்றும் பிறழாது வாழும் காலமெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த இவரது இழப்பு ஒரு தனிமனிதனின் இழப்பல்ல. ஒரு மாவட்டத்தினதும், ஒட்டுமொத்த மக்களினதும் உணர்வுகளோடு ஒன்றிக் கலந்திருந்த ஒரு தமிழ்த்தேசியப் பற்றாளனின் இழப்பு என்றுள்ளது. (கு)

அரபுமொழியால் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள்!

அமைச்சர் மனோ சாட்டை

கொழும்பு, ஜூன் 17

அரபு மொழி தனிப்பட்ட பாவனைக்கானது என்பதை சில முஸ்லிம் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவேண்டும் என மனோ கணேசன் குறிப்பிட்டார்.

அரபு மொழி இந்த நாட்டிலே பெரும் பிரச்சினையை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆனால் அது நாட்டின் மொழியல்ல. பள்ளிவாசல்களில் அரபி மொழியைப் பயன்படுத்த முடியும். ஆனால் நாட்டில் ஏற்றுக்கொள்ளாத ஒரு மொழியைப் பகிரங்கமாகப் பயன்படுத்தும்போது சிங்கள மக்களிடத்திலே சந்தேகங்களை ஏற்படுத்தி அப்பாவி முஸ்லிம்கள் மீதான சந்தேகத்தை அதிகரிக்கின்றது.

மேடைகளிலும் தொலைக்காட்சிகளிலும் வீரக்கதை பேசும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அரபு மொழி தனிப்பட்ட பாவனைக்கானது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

முஸ்லிம் குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

சாவகச்சேரி, ஜூன் 17

பொசன் பண்டிகையை முன்னிட்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் வதியும் 20 முஸ்லிம் குடும்பங்களுக்கு படை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் ஏற்பாட்டில் படை அதிகாரிகள் கலந்து கொண்டு உலர் உணவுப் பொருள்களை முஸ்லிம் குடும்பங்களுக்கு வழங்கினர். (ம-9)

மாங்குளத்திலும் 29 அரச வீட்டுத் திட்டம் மக்கள் எதிர்ப்புக்கு மத்தியிலும் அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூன் 17

மாங்குளத்தில் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையிலிருந்து காணியை விடுவித்து அதில் அரச வீட்டுத்திட்டம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதற்குத் தாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றபோதும் அதனையும் மீறி அடிக்கல் நடுகை இடம்பெற்றது என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரச அதிகாரிகளுக்கென்று ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் அநாதரவாகக் காணப்படுகின்ற நிலையில், மீண்டும் இவ்வாறான குடியிருப்புக்களைக் கட்டுவது தொடர்பாகவே மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் அரச அலுவலர்கள் 50 பேருக்கு வீடுகள் அமைக்கப்பட்டன. மின்சாரம், வீதி, குடிதண்ணீர் போன்ற வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்ட நிலையிலும் அந்த அரச வீட்டுத்திட்டத்தில் ஒரு குடும்பமும் குடியேறவில்லை.

அந்த வீடுகள் அனைத்தும் பற்றைகளால் சூழப்பட்டுக் காடாகக் கிடக்கின்றன. அங்கு சமூக விரோதச் செயல்கள் இடம் பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதபோல், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நந்தகுமார் நகர் மாதிரிக் கிராமம், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வடகாடு பகுதி கைலாய வன்னியன் மாதிரிக் கிராமம், பண்டார வன்னியன் மாதிரிக் கிராமம் ஆகிய அரச அலுவலர்களின் வீட்டுத்திட்ட வீடுகளும் பூட்டப்பட்ட நிலையிலுள்ளன.

இவ்வாறு அரச அலுவலர்களுக்கென்று அமைக்கப்படுகின்ற வீடுகள் தொடர்ச்சியாக பயன்பாட்டுக் கிடக்கின்றன. அதனால் அரச அலுவலர்களுக்கென்று ஏன் புதிதாக வீடுகள் கட்டுகிறீர்கள்?. என்று பொதுமக்கள் நியாயமாக கேள்வி கேட்கின்றனர்.

இந்த நிலையிலேயே, தற்போது ஏ9 வீதி மாங்குளத்தில் ஓர் அரச வீட்டுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக அடிக்கல் நடப்பட்டன. தேசிய வீடமைப்பு அதிகார சபை அங்கு 29 வீடுகளைக் அமைக்க வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே அமைக்கப்பட்ட வீட்டுத்திட்ட வீடுகளில் அரச அதிகாரிகளைக் குடியேற்றுமாறும் அல்லது அந்த வீடுகளை வீடற்ற மக்களுக்கு வழங்குமாறும் மக்கள் கோருகின்றனர். அவ்வாறு வழங்கி விட்டு அரச அலுவலர்களுக்கு வேறு இடங்களில் வீட்டுத் திட்டங்களை.வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அடிக்கல் நடும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிரேமகாந்த், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன், தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் விஜித கமகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (த-246)

முல்லைத்தீவு மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்ட அழகக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்புக்கூட்டமொன்று, கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அழகக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சண்முகம் சிவகுமாரின் தலைமையில் முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள அழகக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் கூட்டம் இடம்பெற்றது. அழகக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய அபிவிருத்தி மற்றும் குறைபாடுகள், சங்கத்தினால் அங்கத்தவர்களுக்கு செய்யப்படும் சேவைகள் தொடர்பில் கூட்டத்தில் அதிகம் பேசப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைத் தலைவர் க.தவராசா, கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் மற்றும் கூட்டுறவு உதவி ஆணையாளர் சிங்கநாயகம், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், சுகாதார திணைக்கள அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)

மகளுக்குத் தொல்லை கொடுத்தோரை தட்டிக்கேட்ட தந்தை மீது கடும் தாக்குதல்

வவுனியா, ஜூன் 17

மகளுக்குத் தொந்தரவு புரிந்த இளைஞர்களைத் தட்டிக்கேட்ட தந்தையையும் மற்றும் அவரது அண்ணனின் நண்பனையும் குறித்த இளைஞர்கள் மோசமாகத் தாக்கியுள்ளனர். காயமடைந்த அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தந்தை ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்குமாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தந்தையும் மகளும் அயலிலுள்ள பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்று கொண்டிருந்தனர். வீதியில் நின்ற இளைஞர்கள் அந்தப் பெண்ணை கிண்டல் செய்தவாறு அவரின் கையைப் பிடிக்கவும் முயன்றுள்ளனர்.

பெண்ணின் தந்தை இளைஞர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். இளைஞர்கள் கட்டையாலும் தலைக்கவசத்தாலும் தாக்கினர்.

பெண் தனது அண்ணனின் நண்பனுக்கு விடயத்தைக்கூறி அழைத்துள்ளார். அங்குவந்த அண்ணனின் நண்பன் மீதும் இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்குஅயலவர்கள் ஒன்று கூடவே இளைஞர்கள் அங்கிருந்து சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் கடுமையான தாக்குதலால் தந்தை சறிது நேரத்தில் மயக்க நிலைக்குச் சென்றுவிட்டார். அதனால் அவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆதார மருத்துவமனைக்குமாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அன்றையதினமே வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தாக்குதல் மேற்கொண்ட இளைஞர்களின் ஒளிப்படம் மற்றும் அவர்களின் தகவல்கள் அனைத்தும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில் தாக்கப்பட்டவர்களின் தரப்பினரின் தகவலின்படி வவுனியா பொலிஸார் இருவரைக் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இருவரும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையுடன் செல்லும் மகளுக்குக்கூடத் தற்போது பாதுகாப்பில்லாத நிலை காணப்படுமானால், தனியே செல்லும் பெண்களின் நிலை என்ன? என்று கேட்கும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் உறவினர்கள், இந்த விடயத்தில் பொலிஸாரின் நடவடிக்கை போதியதாக இல்லை என்று கவலை தெரிவித்தனர்.

தனியார் கல்வி நிலையங்கள் உட்பட பல தேவைகளுக்கும் பெண்கள் வீதியில் பயணம் செய்ய வேண்டியநிலை உள்ளது. குறித்த இளைஞர்களின் நடத்தையை மிக மோசமாக விவரித்த அங்குள்ள மக்கள் இத்தகைய இளைஞர்களுக்கு நீதித்துறை சட்டத்தையும் தாண்டி கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (த)

அத்துரலிய தேரரின் வடக்குப் பயணம் தமிழ்- முஸ்லிம்களைப் பிரிக்கத்தான்

சிவமோகன் எம்.பி. கூறிக் கண்டிக்கிறார்

மன்னார், ஜூன் 17

தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரிக்கும் தந்திரமே அத்துரலிய ரத்னதேரரின் வடக்குப் பயணம் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கண்டனம் தெரிவித்தார்.

சிங்கள பௌத்த தேரர்கள் காலத்துக்கு காலம் முஸ்லிம் மக்களை வைத்துக் கொண்டு எமது விடுதலைப் போராட்டத்தை உருக்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை கடந்த கால வரலாறு. இன்று முஸ்லிம் மக்களின் பிரச்சினையை வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் நுழைந்து நல்லவர்கள் போல் வேடமிட்டுக் கொண்டு வருகிறார்கள்.

எமது சைவ சமயத்தின் விழுமியங்களைச் சாதாரண சிங்கள மக்கள் கடைப்பிடிப்பது என்பது அனைவரும் அறிந்ததே. 'அன்பேசிவம்' என்னும் கொள்கையின் கீழ் பௌத்த மதத்தைப் பரப்பிய மகான்தான் கௌதம புத்தர். அவரது கொள்கைகள் அனைத்தும் அன்பைச் சார்ந்தவை. அனைவரையும் அரவணைத்துச் செல்வது என்பது அவரது ஐந்து கொள்கைகளில் ஒன்று என்பதை நாங்கள் அறிவோம். சாதாரண சிங்கள மக்கள் இந்துக் கோயில்களை வணங்குவது எமக்குத் தெரிந்ததே. ஆனால் இங்கு பிரச்சினை அதுவல்ல. எமது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உருக்குலைப்பதற்காகத் தேரர்களின் ஒரு பகுதியினர் முழு வேகத்துடன் செயற்பட்டார்கள். இன்று இதே தேரர்கள் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை உருக்குலைத்து எமது வடக்கு-கிழக்குப் பகுதியை தமது ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வதற்கான சூழ்ச்சியை நிறைவேற்றிக் கொள்ளத்தான் அத்துரலிய ரத்ன தேரர் வடக்குப் பகுதியில் கால் வைத்திருக்கின்றார் என்பது கண்டனத்துக்கு உரியது. இவரை நான் நன்கறிவேன்.

இவரின் உணவு ஒறுப்புப் போராட்டம் தமிழ் பேசும் மக்களின் நல்லிணக்கத்தை உருக்குலைத்து விட்டிருந்தது என்பது உண்மை. இதை மூடிமறைப்பதற்காக இங்கு நீலிக்கண்ணீர் வடிப்பதற்குத் தேரர் வடக்குக்குப் பயணம் செய்துள்ளார்.

இவரது பயணத்தைத் தமிழ் மக்கள் அவதானத்துடன் அணுக வேண்டும் பன்னாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத்துக்கு உள்ளூர் முஸ்லிம் மக்கள் மீது பெரும் அழுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கு இவர்கள் தான் காரணம். கிறிஸ்தவ மக்கள் மக்கள் பாதிக்கப்பட்டாலும் அதை அவர்கள் தூரநோக்கத்தோடும் புரிந்துணர்வோடும் அணுகியிருந்தார்கள். எனவே இந்தக் குண்டுத்தாக்குதலில் ஈடுபட்ட இஸ்லாமிய தீவிர வாதிகள் அனைவரும் தமிழர் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதற்கும் அதை இல்லாமல் செய்வதற்கும் இலங்கை இராணுவத்தால் பாவிக்கப்பட்ட நபர்கள் தான். எனவே இவர்களின் நிகழ்ச்சி நிரல்கள் சிங்கள பேரினவாதத்தின் திட்டமிடல்கள்தான். - என்றார். (த-213)

மக்கள் பிரச்சினைகளைப் பேச எம்.பிக்கள் தயாரில்லையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

தமிழ் தேசியம் தடம்மாறிப் போயுள்ள நிலையில், மக்களின் பிரச்சினைகளைப் பேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரத் தயாராக இல்லை என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையமும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து மீன்பிடிக் கொள்கை மற்றும் நிலையான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம்கிறின்கிறாஸ் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறைப் பகுதியில் 6 துறைமுகங்கள் உள்ளன. சிறு இறங்குதுறைகளாக இருந்தாலும், அந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் வீடுகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. துறைமுகத்தை அண்டிய பகுதிகள் விடுவிக்கப்படாத நிலையில், அதற்கு அண்மித்த பகுதியில் உள்ள மயானம் விடுவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இல்லை மயானம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதுதான் இந்த அரசின் நில விடுவிப்பு என பன்னாட்டுக்குக் காட்டும் செயற்பாடாக இருக்கின்றது.

எமது அன்றாடப் பிரச்சினைகள் எனப் பேச வேண்டிய நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றைப் பேச தமிழ்த் தலைமைகள் தயாராக இல்லை. இன்று தமிழ்த்தேசியம் தடம்மாறிப் போய் உள்ளது. அவ்வாறான நிலையில் உங்களுடைய பிரச்சினை களைப் பேசுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரத் தயாராக இல்லை என்பதே இன்றைய உண்மையான நிலை.

புதுக்குடியிருப்புப் பகுதியில் 13 கிராமங்களில் சமுர்த்தி உதவி வழங்காத நிலையுள்ளது. ஈழ விடுதலைப் போரில் ஈடுபட்டவர்கள் என்ற காரணத்தால், அவர்கள் ஓரங்கட்டப்பட்டு, சமுர்த்தி உதவி வழங்காது இருந்துள்ளார்கள்.

எமது பொருளாதாரத்தை எமது வளங்களில் வைத்திருக்கவேண்டும். கையேந்த வேண்டும் என்ற நிலையில்தான் சமுர்த்தியை வைத்திருக்கின்றார்கள்.

முஸ்லிம் அமைச்சர்கள் கோடிக்கணக்கான ரூபா பணத்தைக் கொண்டு, தமது சமூகம் சார்ந்து பல தொழில் விருத்திகளைச் செய்யத் தயாராக இருக்கின்றார்கள் எனின், 2015 இல் இருந்து இணக்க அரசியலுக்குள் போய் உள்ளவர்கள் ஏன் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும், நடுநிலையான 5 கைத்தொழில் நிலையங்களை உருவாக்க முடியாமல் போனதென்ற கேள்வி எழுகின்றது.

உணவகம் கட்ட ரூ.80 லட்சம் வீடு கட்ட ரூ.7 லட்சமா?

கைதடியில் அம்மாச்சி உணவகம் அமைக்க 80 லட்சம் தேவை ஆனால், எமது மக்களின் வீடுகளைக் கட்ட 5 முதல் 7 லட்சம் போதும் என்கின்றார்கள். வீட்டைக் கட்ட மணல் இல்லை. கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கதைக்க எமது மக்கள் பிரதிநிதிகள் தயாராக இல்லை. வெற்றுக் கதிரைகளுக்குப் பேசி விட்டு, வீராப்பாக சொல்கின்றார்கள் நாங்கள் நாடாளுமன்றில் உங்களின் பிரச்சினைகள் எல்லாம் பேசியிருக்கின்றோம் என்று. அதனால் தான், எதிர்வரும் தேர்தல்களின் போது, சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்ப வேண்டும் - என்றார். (த-106)

அரசியல் சூழ்நிலை உறுதியற்றுள்ளது!

கூட்டமைப்பின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 17

நாட்டிலே அரசியல் சூழ்நிலை உறுதியற்ற நிலையில் இருக்கின்றது. எப்போது என்ன நடக்கும்? என்ன தேர்தல் வரும்? அரசு தப்புமா? அல்லது கவிழ்ந்து விடுமா? என்றெல்லாம் பல கேள்விகள் நாளாந்தம் எழுந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊட்கப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து லட்சம் ரூபா நிதியில் கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் அமைக்கப்பட்ட வழிபாட்டுப் பொருள்கள் விற்பனை நிலையமும் மறைபோதனைக் கூடமும் கொண்ட கட்டடம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மக்களின் தேவைகளை நிறைவேற்ற எம்மால் இயன்ற அனைத்துப் பணிகளையும் நாம் செய்வோம். குறுகிய காலத்துக்குள் இந்த வருட இறுதிக்குள் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டிலே அரசியல் சூழ்நிலை உறுதியற்ற நிலையில் இருப்பது அனைவருக்கும் தெரியும். எப்போது என்ன நடக்கும்? என்ன தேர்தல் வரும்? அரசு சிக்குமா? அல்லது கவிழ்ந்து விடுமா? என்றெல்லாம் பல கேள்விகள் நாளாந்தம் எழுந்துகொண்டிருக்கின்றன. எனினும், அவை ஒரு பக்கம் இருக்க மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களிலேயே நாங்கள் எங்களுடைய கவனத்தைத் செலுத்தி அதனைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்" என்றார். (ம-22,173)

ஆயுதக் குழுவுக்கு அங்கீகாரம் வழங்கப்போகின்றாரா ஆளுநர்?

சிறீதரன் எம்.பி. சாட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 17

சட்டவிரோதச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆயுதக் குழுக்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அங்கீகாரம் கொடுக்கப் போகின்றாரா? என்ற கேள்வியை அனைவரினதும் மனதில் தோற்றுவிக்கிறது ஆளுநரின் செயற்பாடு.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

ஆவா குழுவுடன் எந்தவொரு தனிப்பட்ட பாதுகாப்பு அலுவலரும் இன்றி நேரில் சந்தித்து கலந்துரையாடத் தயாராக உள்ளேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் அண்மையில் ஊடக அறிக்கை வெளியிட்டார். குறித்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆவா குழுவுடன் பேச்சுக்குத் தயார் என்று ஆளுநர் அறிவித்திருப்பது அந்த அமைப்புக்கு அங்கீகாரம் வழங்க ஆளுநர் முன்வருகின்றாரா? என்ற கேள்வியை பலரின் மனதில் எழுப்பியுள்ளது.

இன்று ஆவா போன்று இன்னுமின்றும் பல்வேறு குழுக்கள் உருவாகினால் அவற்றுக்கும் அங்கீகாரம் வழங்க வாய்ப்புள்ளது என்ற எண்ணவோட்டத்தை ஆளுநரின் கருத்து ஏற்படுத்திவிடும்.

ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் இராணுவத்தின் பின்புலத்தின் கீழ் தான் இயங்குகின்றன. பொலிஸாரும் அவர்களுக்கு நெருக்கமாக உள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டால் உடனேயே விடுவிக்கப்படும் நிலையும் காணப்படுகிறது. ஆகவே ஆளுநர் ஆவா குழுவுடன் பேசினாலும் தொடர்ச்சியாக இந்த செயற்பாடுகள் நடைபெறும். மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இராணுவத்தினர் மனம் வைத்தாலேயே இத்தகைய செயற்பாடுகள் குறைவடையும் - என்றார். (ம-7)

விளையாட்டு உபகரணங்களை மஸ்தான் எம்.பி. வழங்கினார்

வவுனியா, ஜூன் 17

வவுனியா, றம்பைவெட்டி விளையாட்டுக் கழகத்துக்கு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்.

றம்பைவெட்டியிலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இவை வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அவை வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட வசதியற்ற விளையாட்டுக்கழகங்களுக்கு அவை வழங்கப் பட்டன என்று மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்வில் வவுனியா நகரசபை உபதவிசாளர் சு.குமார சுவாமி, பிரதேச சபை உறுப்பினர் ஜே.திரவியவதனி, நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலக உதவியாளர்கள் மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

ஆவா குழுவினருக்கான ஆளுநரின் அழைப்பு நகைப்புக்குரியது

அனந்தி இவ்வாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

ஆவா குழுவுடன் எந்தவொரு தனிப்பட்ட பாதுகாப்பு அலுவலரும் இன்றி நேரில் சந்தித்து கலந்துரையாட தயாராக உள்ளேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் அண்மையில் தெரிவித்தமை நகைப்புக்குரிய விடயம் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சிறிய இளைஞர்களைக் கொண்டு இயங்கும் இந்த ஆவா குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடுவது என்பது அவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதுபோல அமைந்துவிடும். இது ஒரு வேடிக்கையான விடயம். மீனவர்கள் தமது பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடச் சென்றபோது அதற்கான பதில்கள் கிடைக்கவில்லை என்று எனக்கு அவர்கள் சொன்னார்கள். இவ்வாறிருக்கையில் சிறிய ஆயுதக் குழுவொன்றை பேச்சுக்கு அழைத்தமை நகைப்புக்கு உரியது" - என்றார். (ம-7)

அமைச்சு பதவிகளை துறந்தமை ரணில் மேற்கொண்ட தந்திரமே!

வாசுதேவ குற்றஞ்சாட்டுகின்றார்

கொழும்பு, ஜூன் 17

முஸ்லிம் அமைச்சர்களின் பதவி விலகல் வெறும் நாடகம் என்பது தற்போது நாட்டுமக்களுக்கு தெட்டத்தெளிவாக புலனாகியுள்ளது. ரிசாத் பதியுதீனைப் பாதுகாக்கும் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தந்திரமே இது. ரிசாத் பதியுதீன் பாதுகாக்கப்பட்டதன் பின்னர் இது நிறைவுக்கு வந்துள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் தமது பதவிகளை பொறுப்பேற்கவுள்ளனர் என்று வெளியாகியுள்ள விடயம் குறித்து கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் ரிசாத் பதியுதீன் மீது பல குற்றச்சாட்டுக் கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என நாம் பல முறை அழுத்தம் கொடுத்தோம். ஆனால் அதை அரசு உதாசீனம் செய்துவிட்டது. பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று பல குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள ரிசாத் பதியுதீன் அமைச்சுப்பதவியை வகிப்பது நாகரிகமற்றது. இதை அவரும் உணரவில்லை இந்த அரசும் உணரவில்லை. இதன் தாக்கத்தை உணர்ந்த அத்துரலியே ரத்ன தேரர் உண்ணாவிரதம் இருக்கும் அளவுக்கு நிலைமை சென்றது.

தேரருக்கு ஆதரவாகப் பலர் குரல் கொடுக்க ஆரம்பித்ததை அடுத்து நிலைமையை சமாளிப்பதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் அரங்கேற்றப்பட்ட நாடகமே முஸ்லிம் அமைச்சர்களின் பதவி விலகல். தற்போது அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் நோக்கம் நிறைவேறி ரிசாத் பதியுதீன் பாதுகாக்கப் பட்டுள்ளார். ஆகவே பதவி விலகிய அமைச்சர்கள் மீண்டும் தமது பதவிகளை பொறுப்பேற்க போகின்றனர். இது நாட்டு மக்களை முட்டாள்களாக் கும் ஒரு நாடகமாகும். தற்போது மாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து தமது பதவிகளை மீண்டும் பொறுப்பேற்க போகின்றோம் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். இவர்கள் தமது பதவிகளை விட்டு விலகும் போது மாநாயக்க தேரர்களை கூட்டாவிலகினார்கள்? இவை அனைத்தும் நாடகமே.

அவ்வாறு முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் தமது பதவிகளை பொறுப்பேற்றாலும் ரிசாத் பதியுதீன் அமைச்சுப்பதவியை ஏற்கக் கூடாது. அதற்கு அவர் தகுதியற்றவர். அவர் அமைச்சுப் தவியை ஏற்பது நாகரிகமற்றது. அதற்கு எதிராக நாம் தொடர்ந்துகுரல்கொடுப்போம். தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கு கோத்தபாய ராஜபக்ச உதவினார் என்று முன்னாள் மேல்மாகாண ஆளுநர் அஸாத் சாலி நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சாட்சியமளித்துள்ளார். இது நகைப்புக்குரியதாகும். இவர்கள் எப்போதும் ஐக்கிய தேசிய கட்சிக்கு வக்காலத்து வாங்கும் வகையிலேயே தமது கருத்துக்களை தெரிவிப்பார்கள். இவர்கள்தான் கடந்த காலத்தில் கோத்தபாய ராஜபக்ச முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார் என்று தெரிவித்தனர். ஆனால் தற்போது முஸ்லிம் அமைப்புகளுக்கு ஆதரவாக செயற்பட்டனர் என்று தெரிவிக்கின்றனர்.

இதில் எது உண்மை என்பது தான் புரியவில்லை. இவர்கள் கூறும் இருவிடயங்களும் உண்மையாக இருப்பதற்கு சாத்தியமில்லை காரணம் இரண்டும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டது. இவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டில் எது உண்மை எது பொய் என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். -என்றார். (எ)

பெரமுனவின் வேட்பாளர் பெயர் மிக விரைவில் அறிவிக்கப்படும்

ரோஹித்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு. ஜூன் 17

அரச தலைவர் தேர்தல் வேட்பாளரின் பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது என்று சிறி லங்கா பொது மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். அரச தலைவர் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள தமது கட்சியின் தேசியப் பொதுக்கூட்டத்தின்போது அரச தலைவர் வேட்பாளர் அறிவிக்கப்படுவார்.

சிறி லங்கா பொதுமக்கள் முன்னணி உள்ளிட்ட கட்சிகள் தேர்தலுக்குத் தயாராகவுள்ளோம். எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி கட்சியின் தேசிய பொது சம்மேளனம் கூடவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச வேட்பாளர் குறித்த அறிவிப்பை வெளியிடுவார். என்றார்.

அதேவேளை, அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவேன் என்று கடந்த மாதம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச பகிரங்கமாக அறிவித்திருந்தார். எனினும் சிறிலங்கா பொது மக்கள் முன்னணி சார்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகாத நிலையில் தற்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

மைத்திரிபாலவை ஹிஸ்புல்லா சாதுரியமாக ஏமாற்றி விட்டார்

குற்றஞ்சாட்டுகின்றார் சிறிநேசன்

கொழும்பு. ஜூன் 17

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரான் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளார் என்று கூறி கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா அரச தலைவரைச் சாதுரியமாக ஏமாற்றியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஸஹ்ரான் தற்போதைய அரச தலைவரின் ஆதரவாளராகத்தான் செயற்பட்டவர் என்றும், கடந்த அரச தலைவர் தேர்தலில் எப்போதும் தான் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளராகத்தான் செயற்பட்டேன் என்றும் ஹிஸ்புல்லா நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பார்க்கப்போனால் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஹிஸ்புல்லா எவ்வளவு சாதுரியமாக ஏமாற்றியுள்ளார் என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

அவர் அரசியலில் கட்சித் தாவலிலேயே ஈடுபட்டு வருகின்றார்.

குறுகிய காலக்கட்டத்தில் அனைத்து அரசியல் தலைவர்களையும் ஏமாற்றும் செயற்பாட்டையே அவர் செய்து வருகின்றார். - என்றார். (எ)

ஐஸ் பக்கெற் விழுங்கியவர் உயிரிழப்பு

கொழும்பு. ஜூன் 17

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஐஸ் எனப்படும் போதைப் பொருளடங்கிய பக்கெற்றை விழுங்கினார் என்று கூறப்படும் ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

வெல்லம்பிட்டி - நாகஹமுல்ல பகுதியில் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். போதைப் பொருளடங்கிய பொதியொன்றை விழுங்கியுள்ளேன் என்று அந்தச் சந்தேகநபர் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். அதையடுத்து சந்தேகநபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கொலன்னாவ பகுதியை சேர்ந்த 38 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும், சடலம் தேசிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

திஸ்ஸ மீண்டும் ஐ.தே.கவில் இணைவதற்கு தடையில்லை

அகிலவிராஜ் கூறுகின்றார்

திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு விரும்பினால் தாராளமாக இணைய முடியும் என்று கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் இணையவுள்ளார் என்று தகவல் வெளியாவது தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திஸ்ஸ அத்தநாயக்க கட்சியில் மீண்டும் இணைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவரை விடமும் மிகவும் மோசமாகத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்தவர்கள் எல்லோரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்கள். அவர் விரும்பினால் இணையலாம்.

அவர் கட்சிக்கு அதிக சேவைகள் செய்தவர். அவரது சேவையை நாம் மதிக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயகக் கட்சி. எவரையும் விமர்சிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு- என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க, 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் காலத்தில் மகிந்தவின் பக்கம் கட்சி தாவியிருந்தார். (எ)

குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்: உறுதியாகக் கூறுகிறார் ஹிஸ்புல்லா

கொழும்பு. ஜூன் 17

தன்மீது சுமத்தப்பட்டுள்ள எந்தவொரு குற்றச்சாட்டையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் தான் தவறு செய்தமை நிரூபணமானால் எந்த தண்டனையையும் ஏற்க தயாராகவே இருக்கின்றேன் என்றும் கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட 8 மணிநேர விசாரணைகளுக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சவூதி அரேபிய முதலீட்டாளர்கள் மூவரை நான் பாசிக்குடா விடுதியில் சந்தித்திருந்தேன். இதுதொடர்பாக என்னிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதேபோல், மறுவாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளியான இன்பராசா என்பவர், நான் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்கினேன் என்று என்மீது முறைப்பாடு அளித்திருந்தார். இது தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெற்றன. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான ஸஹ்ரான் தொடர்பாகவும் அதிகாரிகள் என்னிடம் விசாரணைகளை நடத்தினர்.

இனிமேல் எப்போது விசாரணைக்காக அழைப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. பெரும்பாலும் விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டது என்றே நான் கருதுகிறேன். இந்த விசாரணைகள் முடிவடைந்தவுடன் பொலிஸ் மற்றும் அரச தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

பாசிக்குடா விடுதியில் நான் சந்தித்தவர்கள் பயங்கரவாதிகள் என்று பொய்யான பரப்புரைகள்தான் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இது முற்றிலும் பொய்யான கருத்தாகும். இது பொய்யான குற்றச்சாட்டு என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணையின் ஊடாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்கவே நான் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

என் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள எந்தவொரு குற்றச்சாட்டையும் நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இவை அனைத்தும் பொய்யானவையாகும். நான் எந்தவொரு தவறையும் செய்யவில்லை. அப்படி தவறு செய்திருந்தால் எவ்வித தண்டனையையும் பெற்றுக்கொள்ள நான் தயாராகவே இருக்கிறேன். - என்றார். (எ)

நாடு திரும்பினார் மைத்திரிபால

தஜிகிஸ்தானுக்குச் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடு திரும்பியுள்ளார்.

ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பகத்தன்மையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த 5ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மூன்று நாள்கள் பயணமாக கடந்த 13ஆம் திகதி தஜிகிஸ்தானுக்குச் சென்றிருந்தார். அங்கு பல முக்கிய சந்திப்புக்களையும் நடத்தியிருந்தார். நேற்று அவர் மீண்டும் நாடு திரும்பினார். (எ)

சஜித்தை அரச தலைவராக்கும் எண்ணம் ஐ.தே.கவுக்கு இல்லை

கூட்டு எதிரணி எம்.பி. திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரச தலைவராக வேட்பாளராக களமிறக்கும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத்துக்கு இல்லை என்று ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சஜித் பிரேமதாசவின் பெயரோ, கருஜயசூரியவின் பெயரோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் பெயரோ அரச தலைவர் வேட்பாளருக்காகப் பரிந்துரைக்கப்படவில்லை.

எனக்கு தெரிந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக களமிறங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என்று மட்டும் விளங்குகின்றது.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தற்போது பெரும் எதிர்ப்பலைகளும் எழுந்துள்ளன. அதனால் அடுத்த தெரிவாக கருஜயசூரியவை களமிறக்குவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன. சஜித் பிரேமதாசவை களமிறக்கும் எண்ணம் அந்தக் கட்சிக்கு ஒருபோதும் இல்லை.

சஜித்திடம் அந்தப் பதவியைக் கொடுக்கும் அளவுக்கு அந்தக் கட்சியின் தலைவர்கள் எவரும் விரும்பமில்லை என்பதை அறியமுடிகிறது. எம்மை பொறுத்தவரை யாரை களமிறக்கினாலும் நிச்சயமாக நாம் தோற்கடிப்போம். நாம் அடுத்த அரச தலைவர் தேர்தலில் பெரும் வெற்றியடைவோம் என்பது மட்டுமே உறுதியாகக் கூறமுடியும். அதற்காக ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து சக்திமிக்க ஒருவரை வேட்பாளராக களமிறக்குவோம்.

அந்த வேட்பாளர் யார் என்பதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்வுடன் நாம் ஒன்றிணைந்து தீர்மானிப்போம். என்றார்.

அதேவேளை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் அரச தலைவர் தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காகத் தற்போதே கட்சிகள் முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர் சஜித் பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராக களமிறங்குவார் என பலரும் எதிர்வு கூறி வருகின்றனர். (எ)

நற்பண்புகளை சிந்தையில் இருத்த வேண்டிய தருணம்

பொசன் தினத்தை முன்னிட்டு அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

நாம் பெற்ற உன்னத சமய கலாசாரத்தின் மூலாதாரமான கருணை, அமைதி, நல்லிணக்கம் ஆகிய நற்பண்புகளை சிந்தையில் இருத்தவேண்டிய தருணம் இதுவாகும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு அரச தலைவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

ஒட்டுமொத்த இலங்கையர்களினதும் பொசன் பௌர்ணமி தின உறுதிமொழியாக அமைய வேண்டியதும் அதுவேயாகும். அந்த ஆன்மிக மலர்ச்சியையும் வளமான கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும். அதற்கான ஆற்றலும் அறிவும் கிட்டும் பொசன் பௌர்ணமி தினமாக இன்றைய தினம் அமைய வேண்டும் என பிரார்த்தித்திக்கின்றேன் - என்றுள்ளது.

கழிவுகளை அதிகம் கடலில் கொட்டும் நாடுகளில் 5ஆவது இடத்தில் இலங்கை

முதலிடம் சீனா என்கிறது ஆய்வு

கொழும்பு, ஜூன் 17

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப்பொருள்களைக் கடலில் கொட்டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாமிடத்தில் உள்ளது என்று ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

கடந்த 2016ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பிஸ்னஸ் டைம்ஸ் சஞ்சிகை மேற்கொண்ட ஓர் ஆய்விலும், உலகில் பெருமளவு பிளாஸ்டிக் கழிவுப் பொருள்களை கடலில் வீசும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 5ஆவது இடத்தில் காணப்பட்டது.

நடப்பாண்டில் உலகின் பல நாடுகளையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை அதிகளவில் சமுத்திரத்தில் கொட்டும் நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடம் வகிக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப்பொருட்களை உரிய முறையில் அகற்றாது, ஆறுகள் வழியாக அவற்றை கடலில் சேர்ப்பதனாலேயே, இலங்கையில் இவ்வாறானதொரு நிலமை ஏற்பட்டுள்ளது. இதனால், கரையோரப்பகுதி மற்றும் சமுத்திரச் சூழல் ஆகியன பெருமளவில் பாதிக்கப்படுகிறது என்று சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலை காரணமாக, கடற்பிராந்தியங்களின் காற்று மற்றும் அதனுடன் கூடிய மழை கொண்ட வானிலையில் மாற்றம் ஏற்படக்கூடும் என அதிகார சபையின் பொதுமுகாமையாளர் கலாநிதி டேர்னி பிரதீப் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் சுற்றுலா, கைத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலுக்கு என்பனவற்றுக்கு பெரிய அச்சுறுத்தலாக அமையுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலை நீடிக்கும் பட்சத்தில் 2050ஆம் ஆண்டளவில், சமுத்திரத்தில் மீன்களை விட பிளாஸ்ட்டிக் பொருள்களே அதிகமாக காணப்படும் என கலாநிதி டேர்னி பிரதீப் மேலும் தெரிவித்துள்ளார். (ம-21)

காணாமல்போன மாணவி சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூன் 17

மூன்று நாள்களாக காணாமல் போயிருந்த பதுளையைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

பதுளை மெத பத்தனவைச் சேர்ந்த 19 வயது மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 14 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கந்தகெட்டிய பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகள் ஒன்றிணைந்து தேடுதல் மேற்கொண்டனர்.

அதன்போது மாணவிக்குச் சொந்தமான பொருள்கள் சிலவொங்கல்ல நீர்தேக்கத்துக்கு அருகில் உள்ள புதர் ஒன்றிற்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து லொங்கல்ல நீர்தேக்கத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்ட பொலிஸார் குறித்த மாணவியின் சடலத்தை நேற்றுக்காலை கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை களை ஆரம்பித் துள்ளனர். (எ)

ஐக்கிய தேசிய முன்னணியின் அரசை விரைவில் கவிழ்ப்போம்

மகிந்த அணி கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 17

இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்துள்ள இந்த அரசை நாம் கவிழ்த்தே தீருவோம். இவ்வாறு தெரிவித்தார் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசிய முன்னணி அரசு மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கையில்லை. உயிர்த்த ஞாயிறன்று இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்திய கொலைவெறித் தாக்குதலின் பின்னர் இந்த அரசை நாட்டு மக்கள் முற்றாக வெறுத்துவிட்டார்கள். தாக்குதல்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை கிடைத்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் அசமந்தப்போக்கில் இருந்த இந்த அரசை எப்படி நம்புவது?.

அதனால் இந்த அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் நாம் இறங்கியுள்ளோம். எந்த வேளையிலும் இந்த அரசு கவிழும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத இந்த அரசால் ஆட்சியைத் திறம்பட நடத்த முடியாது.

முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரையும் பதவி துறக்கச் செய்துவிட்டு இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்துள்ள இந்த அரசை வீட்டுக்கே அனுப்புவதே எமது நோக்கமாகும். - என்றார். (எ)

சிறப்பான தர்மத்தைப் பின்பற்றி அனைவரும் இணைய வேண்டும்

பொசன் தினத்தை முன்னிட்டு தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

பயங்கரவாத சக்திகள் செயற்படுகின்ற இவ்வாறான காலப் பகுதியில் மென்மேலும் சிறப்பாக தர்மத்தைப் பின்பற்றி, மனிதாபிமானத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைய வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொசன் தினத்தை முன்னிட்டு அவர் நேற்று விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

உயரிய பொசன் பூரணை தினத்தில் உண்மையான தர்மத்தின் ஆழமான உயர்ந்த பெறுமானங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

வெளிப்புறச் சடங்குகள் மூலமன்றி தர்மத்தின் உண்மையான மையக் கருத்தைக் கொண்டு எமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வோம்.

சிறந்த முன்மாதிரியுடன் ஏனைய சமயங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு மதிப்பளித்து நல்லிணக்கத்துடன் வாழ அனைவரது உள்ளங்களும் ஞானத்தினால் நிரம்ப வேண்டும். என்றுள்ளது. (எ)

வேலை தேடும் பட்டதாரிகள் அமுனுகம எம்.பியுடன் பேச்சு

வன்னி மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் சங்கத்தினர் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித்தலைவரின் பட்டதாரிகள், அரச நியமனம் மற்றும் இளைஞர் விவகாரங்களுக்குப்பொறுப்பாகநியமிக்கப்பட்டவருமான திலும் அமுனுகமவை வவுனியாவில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சந்திப்பு பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ம. ஆனந்தராஜா தலைமையில் அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

வேலைதேடும் பட்டதாரிகள் எதிர்நோக்கும் விடயங்கள் குறித்து நீண்ட நேரமாகக் கலந்துரையாடப்பட்டது என்றும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்தவுடனான சந்திப்பு ஒன்றை வவுனியாவில் ஏற்பாடு செய்யுமாறும் பட்டதாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

அனைவருக்கும் அரச நியமனம் பெற்றுக் கொடுக்க எதிர்க்கட்சித்தலைவரின் ஊடாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்தார் என்று வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ம. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். கலந்துரையாடலின்போது நாவல பிரதேச சபைத்தலைவர் சனத், இலங்கை பொதுமக்கள் பட்டதாரிகள் சங்கத் தலைவர் உபதிஸ்ஸ ஆகியோரும் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

அரசியல் தளம்பலைப் போக்க உடன் தேர்தலை நடத்துங்கள்

கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 17

நாட்டில் தற்போது நீடித்து வரும் அரசியல் தளம்பல் நிலையை நீக்க நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

நாட்டில் தற்போது தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மக்கள் அரங்குக்குச் செல்வதே முக்கியமானதாகும். அரசு நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

அதற்கும் முடியாவிட்டால், விகிதாசாரத் தேர்தல் முறைமையின்படி மாகாண சபைத் தேர்தலையாவது நடத்தி மக்களின் நிர்வாகத்தை நடத்த வழிவகை செய்ய வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்து நிறைவேற்றுவதன் மூலமாக இரண்டு வாரங்களில் தேர்தலுக்குச் செல்ல முடியும்.

இப்பொழுது நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பது ஜனநாயக முறைமையிலான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு தேர்தல்கள் காலதாமதப்படுத்தப்படுவதாகும்.

இனவாதிகளான தலைமைகள் எவரும் இந்த நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கமாட்டார்கள். எந்தத் தேர்தலும் எந்த சந்தர்ப்பத்திலும் வரலாம் என்கின்ற தளம்பல் நிலையில்தான் நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது தடுமாறிக்கொண்டிருக்கிறது. இனி தேர்தலை நோக்கி நகர்வதைத் தவிர அரசியல் தலைமைகளுக்கு வேறு தெரிவு இல்லை.

அது மாகாண சபைத் தேர்தலாகவோ, பொதுத் தேர்தலாகவோ, அரச தலைவர் தேர்தலாகவோ இருக்கலாம். ஆனால் தேர்தல் நடத்தப்பட வேண்டும். - என்றார். (எ)

அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவதற்கு தயார்

கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்தால் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக களமிறங்குவதற்குத் தயார் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. சிங்கள செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் வேட்பாளர் பதவிக்கு இதுவரை தான் எந்த விண்ணப்பமும் முன்வைக்கவில்லை. கட்சியின் தலைமைத்துவத்துடன் தனது பெயர் பிரேரிக்கப்பட்டால் அது குறித்து ஆராய தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

அமைச்சரின் கொள்ளை பற்றி அடுத்த அமர்வில் கூறுப்படும்

விஜேசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

அரசில் அமைச்சர் ஒருவர் மேற்கொண்டு வரும் பெரும் கொள்ளை தொடர்பாக அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தில் தகவல் வெளியிட்டு, அரசியல் ரீதியாக கடும் தீர்மானத்தை எடுக்கவுள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

இந்த தீர்மானத்தை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது இந்த தகவலை வெளியிடவுள்ளேன். கட்சியின் அமைச்சர் என்றாலும் இந்த விடயத்தில் அவருக்கு எதிராக விருப்பம் இன்றியேனும் நடவடிக்கை எடுக்க நேரிடும்.

அந்த அமைச்சர் யார் என்பதையும் நாடாளுமன்றத்தில் வைத்து வெளிப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ)

பௌத்த நாடு என்ற விவாதமும் ஒருவகையில் அடிப்படைவாதம்

இப்படிக் கூறுகின்றார் நாமல்

கொழும்பு, ஜூன் 17

இலங்கை என்பது சிங்கள பௌத்த நாடு என்பதில் சந்தேகம் இல்லை. அதை விவாதத்துக்கு உள்ளாக்குவதும் ஒருவகையில் அடிப்படைவாதமே.

இவ்வாறு ஒருங்கிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பௌத்தர்கள்விகாரைகளுக்குச் செல்லக்கூட அச்சமான தொரு சூழ்நிலைதான் இலங்கையில் தற்போது நிலவி வருகிறது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவும் அஞ்சுகிறார்கள். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டும் அரசு கண்டுகொள்ளாத தன் விளைவாகவே இவை நேர்ந்துள்ளன.

தற்போது, இதுகுறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளாமல் ஒருவருக்கொருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தெரிவுக்குழுவொன்றை நியமித்தார்கள்.

இதனால் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும் என்றுக் கருதினால், தற்போது இருப்பதைவிட பிரச்சினைகள் பெரிதாகித்தான் உள்ளன. இது சாதாரண ஒரு விடயமல்ல.

சமூகத்தில் முறையான புரிந்துணர்வு இல்லாத காரணத்தினாலேயே அடிப்படைவாதிகள் உருவாகின்றார்கள். இந்த அடிப்படைவாதம் இன்று நாடாளுமன்றம்வரை சென்றுள்ளது. இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடு என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இதனை விவாதிப்பதுகூட ஒருவகையில் அடிப்படைவாதம்தான்.

சில அரசியல்தலைவர்கள் தமது தேர்தல் வெற்றிக்காகவும் அரசியல் எதிர்காலத்துக்காகவும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்க முற்படுகிறார்கள். இவைதான் இன்று இலங்கையில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. - என்றார். (எ)

மைத்திரி, ரணிலை தெரிவுக்குழுவுக்கு அழைப்பது தொடர்பாகவும் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 17

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரை அழைப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை சாட்சியம் வழங்க வரவழைப்பது தொடர்பாகக் குழு உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று பிரதி சபாநாயகரும் அந்தக் குழுவின் தலைவருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தாங்கள் எந்தவொரு உறுதியான முடிவுக்கும் வரவில்லை என தெரிவித்த அவர், முதலில் தலைமை அமைச்சரையா அல்லது அரச தலைவரையா அழைப்பது என தீர்மானிக்கவில்லை என்றும் கூறினார்.

அதேவேளை, இந்த குழு பெரும்பாலும் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரை வரவழைக்கும் என அந்தக் குழுவின் உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நலிந்த ஜயதிஸ்ஸ உறுதிப்படுத்தியுள்ளார்.

19ஆவது திருத்தத்தின் படி, நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன் அரச தலைவர் வரவழைக்கப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் தலைமை அமைச்சரை அழைப்பது உறுதிஎன்றாலும்அரசதலைவரை அழைப்பதில் உள்ள சட்டபூர்வமான தன்மை குறித்த உறுதியான நிலைப்பாடு இல்லை என்று மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெரிவுக் குழுவின் ஆறாவது அமர்வு நாளை பிற்பகல் 2 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இதன்போது காத்தான்குடி பொலிஸில் சேவையாற்றிய முன்னாள் பொறுப்பதிகாரி மற்றும் தற்போதைய பொறுப்பதிகாரி ஆகியோரை முன்னிலையாகுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக பேச்சு நடத்தோம்

ஜே.வி.பி. கூறுகின்றது

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எந்த கட்சியுடனும் கலந்துரையாடபோவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணி, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு வாக்குகளை வழங்குவதன் ஊடாக நாட்டை நேசிப்பவர்களையும் அரசுக்கு எதிரானவர்களையும் அடையாளம் காணமுடியும். அதனால் எவருடனும் கலந்துரையாட அவசியமில்லை. என்றார்.

அதேவேளை, நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விவாதம் அடுத்த மாதம் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (எ)

மகிந்த இருக்கும் வரையில் கோத்தா வருவே முடியாது

ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

மகிந்த ராஜபக்ச இருக்கும் வரை கோத்தபாய ராஜபக்சவுக்கு அரச தலைவர் தேர்தலில் களமிறங்கும் சந்தர்ப்பம் கிடைக்காது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச இருக்கும் வரை கோத்தபாய ராஜபக்சவுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது. கோத்தபாய, தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாக நீதிமன்றத்துக்கு கொடுக்கும் அழுத்தமாகவே இவ்வாறான பரப்புரைகளை முன்னெடுத்து செல்கின்றார்.

அவர் போட்டியிட்டாலும் அவரிடம் இருக்கும் இனவாதத்தால் அவரால் வெற்றி பெற முடியாது - என்றார். (எ)

நிதி நிறுவனத்தில் கொள்ளையிட முயன்றவர் மீது பொலிஸார் கூடு

கொழும்பு, ஜூன் 17

ஹொரனை பகுதியில் நிதி நிறுவனமொன்றில் கொள்ளையிட முயற்சித்த ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று ஹொரனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாணந்துரை வீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனத்தில் நடந்துள்ளது.

பொகுனுவிட பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் பொலிஸாரின் பாதுகாப்பில் ஹொரனை மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

அதேவேளை சந்தேக நபர் கொள்ளையிடுவதற்காக கொண்டுவந்த ஆயுதங்களை பொலிஸார் சோதனைக்குட்படுத்திய போது, சந்தேக நபர் வைத்திருந்த துப்பாக்கி போலித் துப்பாக்கி எனவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

பொலிஸாரின் கைதுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு

கொழும்பு, ஜூன் 17

தான் அணிந்திருந்த ஆடையில் அச்சிடப்பட்டிருந்த வடிவத்தைக் காரணம் காட்டி, பொலிஸார் கைது செய்து, தடுத்து வைத்திருந்தமைக்கு எதிராக, மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

கண்டி மாவட்டத்திலுள்ள கொலங்கொட எனும் பிரதேசத்தை சேர்ந்த, 47 வயதுடைய மஸாஹிமா எனும் பெண்ணே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணிகள் ஏ.எம்.எம்.சறூக் மற்றும் பாத்திமா நுஸ்ரா சறூக் ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க, அரச தலைவர் சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன்ன, இந்த வழக்கை பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்ணின் சார்பாக தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் பெண் அணிந்திருந்த ஆடையொன்றில் பௌத்த சின்னமாகக் கருதப்படும் தர்மச் சக்கரம் அச்சிடப்பட்டிருந்ததாகவும், அதன் மூலம் அவர் பௌத்த மதத்தை அவமதித்து விட்டதாகவும் குற்றம்சாட்டி, மகியங்கனைப் பொலிஸார் கடந்த மே மாதம் 17ஆம் திகதி அவரைக் கைது செய்து, 18ஆம் திகதி மகியங்கணை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போது, பெண்ணை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜூன் மாதம் 3ஆம் திகதி சம்பந்தப்பட்ட பெண்ணின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் வாதங்களைக் கவனத்திற் கொண்ட நீதிமன்றம், அவருக்குப் பிணை வழங்கியது.

இதேவேளை, குற்றம்சாட்டப்பட்ட பெண்ணின் ஆடையில் காணப்பட்ட வடிவம், தர்மச் சக்கரம்தானா என்பதை அடையாளம் காண்பதற்காக, அதனை புத்த சமய அலுவல்கள் ஆணையாளருக்கும், தர நிர்ணய சபைக்கும் தாம் அனுப்பி வைத்ததாகவும், ஆனால், அதனை ஒப்பீடு செய்வதற்குரிய சரியான தர்மச் சக்கர வடிவம் தம்மிடம் இல்லை என்று, அவர்கள் தெரிவித்து விட்டதாகவும், மஸாஹிமாவுக்கு பிணை வழங்கிய அன்று, நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தனது ஆடையில் இருந்த வடிவத்தை காரணம் காட்டி, தன்னைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தமையின் மூலம், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட பெண் மஸாஹிமா உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

(ஒ.5)

நீராவிப்பிட்டி...

பிள்ளையார் ஆலய வளவில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள குருகந்த ரஜமஹா விகாரையின் பெயர் தாங்கிய பலகை வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து பொலிஸாரும் வீதி அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து பெயர் பலகையை 2 நாள்களுக்கு முன்னர் அகற்றியிருந்தனர். பெயர்ப்பலகை அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய உரிமைகள் இயக்கத்தின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் தலைமையில் அழைத்துவரப்பட்ட பௌத்த பிக்குகளும் மூன்று பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட சிங்கள் மக்களும் பிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள குருகந்த ரஜமஹா விகாரையில் முன்னதாக பொசன் வழிபாடுகளை மேற்கொண்டதோடு சத்தியாகிரக போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இங்கு உரையாற்றிய பிக்குகள் தெரிவித்ததாவது,

இந்தப் பகுதியில் பிள்ளையார் ஆலயம் இருந்ததாக தமிழ் மக்கள் பொய்களை கூறி வருகின்றனர். குருகந்த ரஜமஹா விகாரை என்ற விகாரையே பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது. ஆனால் இப்போது அந்த விகாரையில் வழிபட முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சில தமிழ் பயங்கரவாதிகளால் பிள்ளையார் ஆலயம் இருந்ததாக கூறி குழப்பம் ஏற்படுத்துகின்றது, என்று குறிப்பிட்டனர்.

இதன் பின்னர் பெயர் பலகையை அகற்றியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிக்குகளும் அழைத்துவரப்பட்ட சிங்கள மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அகற்றப்பட்ட பெயர்ப்பலகை வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் நடப்பட வேண்டும் எனவும் அவ்வாறு நடப்படாதவிடத்து வரும் விளைவுகளுக்கு தாம் பொறுப்பில்லை எனவும் எத்தனையோ சட்டவிரோத பெயர்பலகைகள் இருக்கும் நிலையில் அவற்றை அகற்றாதவர்கள் விகாரையின் பெயர்பலகையை அகற்றியது தவறு எனவும் தெரிவித்தனர். மேலும் இங்கே பிள்ளையார் ஆலயம் எதுவும் இருக்கவில்லை எனவும் இது ஒரு புராதன பௌத்த ஆலயம், இது தமது ஆலயம் எனவும் சிங்கள மக்களின் உரிமைகளில் கைவைக்கவேண்டாம் எனவும் பௌத்த உரிமைகளை பறிக்கவேண்டாம் எனவும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னணி

முல்லைத்தீவு செம்மலை பிள்ளையார் ஆலயப் பகுதியில், போரின் பின்னர் பாதுகாப்பு தரப்பினரின் ஆதரவுடன் குருகந்த ரஜமகா விகாரை அமைக்கப்பட்டது. விகாராதிபதியால் செம்மலை பிள்ளையார் ஆலய வழிபாடு தடுக்கப்பட்டது. இதனையடுத்த இந்த விவகாரம் நீதிமன்றுக்குச் சென்றது. நீதிமன்றம், இரு தரப்பினரும் அமைதியாக வழிபாடு நடத்தலாம் என்றும், ஆலய விரிவாக்க நடவடிக்கைகளை உரிய திணைக்களங்களின் அனுமதியுடன் முன்னெடுக்க முடியும் என்று உத்தரவிட்டிருந்தது. பிள்ளையார் ஆலயப் பகுதி விகாரைக்குரியது என்று தெரிவித்து கடந்த 6ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

(ஒ.5,ரி3)

தீர்க்கமான...

தேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலைமை காணப்படுகின்றது. அரச தலைவர் தலைமை அமைச்சர் ஆகியோருக்கிடையிலான அதிகாரப் போட்டியால் எவரின் சொல்லைக் கேட்பது என்ற நிலையில் அமைச்சர்கள் உள்ளனர். இந்த அதிகாரப் போட்டியால் நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை, பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறான நிலைமை பல மாதங்களாகத் தொடர்ந்து நீடிக்கின்றபடியால்தான் உயிர்த்த ஞாயிறன்று தீவிரவாதிகள் கொடூரத் தாக்குதல்களை இலகுவாக மேற்கொண்டிருந்தனர்.

நாட்டின் அரசியல் உறுதிப்பாடற்ற நிலைக்கு உடன் தீர்வு வேண்டுமெனில் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதே ஒரே வழி. அப்போதுதான் எந்தத் தரப்பின் கையில் ஆட்சியைக் கொடுக்க வேண்டும் என மக்கள் தீர்ப்பு வழங்குவார்கள். என்னதான் அதிகாரப் போட்டி இப்போது நிலவினாலும் நாட்டின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே. எனவே, நாட்டின் உறுதிப்பாடற்ற அரசியல் நிலைக்கு அவர்தான் தீர்வுகாண வேண்டும். போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த நாட்டை மகிந்த ராஜபக்ச அணியே மீட்டெடுத்தது. சகல இடங்களிலும் அபிவிருத்தியை முன்னெடுத்தது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. இவையெல்லாம் இன்று அதிகாரப் போட்டியால் வீழ்ச்சியடைந்துள்ளன. நாடு நாசமாகின்றதை நாம் விரும்பவில்லை. எனவே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்க்கமான முடிவொன்றை உடனடியாக எடுக்கவேண்டும் - என்றனர். (ஒ.5,22)

ராஜபக்ச...

கூறியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே பசில் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தனித்தே போட்டியிடும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இனியும் நம்புவதற்கு நாம் தயாரில்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பெயரே முதலிடத்தில் உள்ளது. எனினும், அரசதலைவர் தேர்தல் அறிவிப்பு வெளியானதும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உயர்பீடமே வேட்பாளர் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும்' எனவும் அவர் கூறினார்.

(ஒ.5,22)

நாடாளுமன்ற...

தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ள நிலையில், அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் வகையில், பொதுவாக்கெடுப்புக்கு அழைப்பு விட அரச தலைவர் திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது. அவரது இந்த யோசனைக்கு, சட்டமா அதிபர் டப்புல டிலிவேரா சாதகமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும், அரச தலைவரின் சட்ட ஆலோசகர் இந்த நகர்வு குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர், நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அனுமதி கோரும் பொதுவாக்கெடுப்பை நடத்தும் இந்த திட்டத்துக்கு, ஜக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. திட்டமிட்டபடி முதலில் அரச தலைவர் தேர்தலே நடத்தப்பட வேண்டும் என்று இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

(ஒ.5)

நாளை...

அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் அனைவரும் பங்கேற்கவுள்ளனர்.

தஜிகிஸ்தானில் நடைபெற்ற மாநாட்டுக்குச் சென்றிருந்த அரச தலைவர் நேற்றுக்காலை நாடு திரும்பியவுடன் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் அமைச்சர்கள் சிலருடன் உரையாடியுள்ளார். இதன்போது, நாளை காலை 9.30 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் தனது தலைமையில் நடைபெறும் என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு அரச தலைவர் தலைமையில் நடைபெற்றது. உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் அரச தலைவருக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

'தெரிவுக்குழு முன்னிலையில் பாதுகாப்பு அதிகாரிகள் சாட்சியம் வழங்குவதால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுகின்றது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளை நிறுத்தும்வரை அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தமாட்டேன்' என்று அன்று அமைச்சர்களிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

பிரதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெறவில்லை.

இதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

அரச தலைவரின் கோரிக்கை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தது. நாடாளுமன்றத்தின் ஏகோபித்த தீர்மானத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட தெரிவுக்குழு விசாரணையை நிறுத்த முடியாது எனவும், பாதுகாப்பு அதிகாரிகள் சாட்சியம் வழங்கும்போது ஊடகங்களுக்கு இனி மேல் அனுமதி இல்லை எனவும் அது தெரிவித்திருந்தது.

இதையடுத்து அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த அரச தலைவர் இணங்கியுள்ளார் என்று முக்கிய அமைச்சர் ஒருவர் நேற்றிரவு 'உதயன்' பத்திகையிடம் தெரிவித்தார்.

(ஒ.5,22)

'சோபா'...

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

இதன்போதே, 'சோபா' உடன்பாட்டின் சர்ச்சைக்குரிய உட்பிரிவுகள் குறித்து அவருடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளதாக, அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

அமெரிக்காவுடன் 'சோபா' உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. எனினும், 'சோபா' உடன்பாடு குறித்து முதன் முதலில் மகிந்த ராஜபக்ச அரசுடனேயே அமெரிக்கா பேச்சு நடத்தியது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அப்போது அமெரிக்காவுடன் பேசிய மகிந்த ராஜபக்ச இப்போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது முரணானது என்றும் அவர் கூறினார். அவரது ஆட்சிக்காலத்தில் முன்மொழிந்த அல்லது கையெழுத்திடப்பட்ட திட்டங்கள், உடன்பாடுகளுக்கு பின்னர் அவர் எதிர்ப்புத் தெரிவிப்பது இது முதல்முறையல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ.5)

ஓய்வூதிய...

2015ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவு குறைந்தபட்சம் 2 ஆயிரத்து 800 ரூபா முதல் அதிகபட்சம் 20 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

அலுவலக உதவியாளர் முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் 2 ஆயிரத்து 800 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. இதேவேளை, முகாமைத்துவ உதவியாளர் முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவு 5 ஆயிரத்து 200 ரூபாவால் உயர்வடையும்.

ஆசிரியர் சேவையில் முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் 9 ஆயிரத்து 200 ரூபாவாலும் தாதியர் சேவை முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் 7 ஆயிரத்து 100 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற பொலிஸ் அலுவலருக்கான ஓய்வூதியம் 4 ஆயிரத்து 200 ரூபாவால் அதிகரிக்கவுள்ளது.

ஓய்வுபெற்ற மூத்த நிறைவேற்று அதிகாரிகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு 16 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், 2015ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அமைச்சின் செயலர்களுக்கான கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஓய்வூதிய திருத்தத்துடன் ஓய்வூதிய பயனாளிகளுக்கான சம்பள முரண்பாட்டை நீக்கும் வரை வழங்கப்பட்ட 3 ஆயிரத்து 500 ரூபா இடைக்கால கொடுப்பனவு புதிய சம்பளத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளதுடன் 3 ஆயிரத்து 525 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு தொடர்ந்தும் கிடைக்கவுள்ளது.

ஓய்வூதிய கொடுப்பனவை அதிகரிப்பதற்காக அரசு வரவு - செலவுத் திட்டத்தில் 12 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

(ஒ.5)

இரண்டாம் உலகப்போரில்

அமெரிக்கா வீசிய குண்டு செயலிழப்பு

பெர்லின், ஜூன் 17

இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கா போட்ட இராட்சத வெடிகுண்டை வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் பாது காப்பு முன்னெச்சரிக்கையுடன் செயலிழக்க வைத்தனர்.

இரண்டாம் உலகப்போர் 1939-1945 ஆண்டுகளில் நடை பெற்றது. அப்போது ஜேர்மனியின் பெர்லின் நகரில் அமெ ரிக்கா போட்ட 100 கிலோ எடை கொண்ட இராட்சத வெடி குண்டு வெடிக்காத நிலையில் அலெக்சாண்டர்பிளாட்ஸ் சதுக்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்டது. இந்த வெடிகுண்டை செலிழக்க வைக்கும் பணி நேற்றுமுன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்காக அந்தப் பகுதியில் வசித்து வந்த சுமார் 3 ஆயிரத் துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். போக்குவ ரத்து நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த வெடி குண்டை வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் பாதுகாப்பு முன்னெச்சரிக்கையுடன் செயலிழக்க வைத்தனர். (ம)





தஞ்சமடையச் சென்ற சிறுமி வெயிலில் நாவறண்டு இறப்பு

வோஷிங்டன், ஜூன் 17

அமெரிக்காவில் தஞ்சம் அடையத் தாயுடன் சென்ற 6 வயது இந்தி யச் சிறுமி மெக்சிகோ எல்லையில் கொளுத்தும் வெயிலில் நாவ றட்சியால் உயிரிழந்த சம்பவம் தெரியவந்துள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவில் தஞ்சம் அடைய விரும்பி நாள்தோறும் பல் லாயிரக்கணக்கானவர்கள் அந்த நாட்டின் எல்லைப் பகுதிகளில் குவிந்தவாறு உள்ளனர்.

இப்படி வருபவர்களை கள்ளத்தன மாக கடத்தி அழைத்து வருவதற்கு சில இடைத்தரகர்களும் செயல்படு கின்றனர்.

ஆயிரக்கணக்கான டொலர்களை கட்டணமாகப் பெற்று, இப்படி அழைத்து வரப்படும் அகதிகள் மெக்சிகோ நாட்டு எல்லைப்பகுதி யில் உள்ள பாலைவனத்தில் இறக்கி விடப்படுவ துண்டு.

அந்த வகையில், இந்தியாவைச் சேர்ந்த ஒரு தாயும் அவரது 6 வயது மகளும் இடைத்தரகர்கள் மூலம் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காமெக்சிகோ எல்லை யில் உள்ள அரிசோனா பாலைவ னப்பகுதியை வந்தடைந்தனர். பாலைவனத்தில் சுட்டெரிக்கும் 108 டிகிரி வெயிலில் தாயும் மகளும் சுற்றித் திரிந்துள்ளனர்.

தனது மகளுக்கு குடிக்க தண்ணீர் கொண்டு வருவதற்காக இந்தியப் பெண் வேறொரு பெண்ணுடன் புறப்பட்டு சென்றார். தாயார் வருவ தற்கு முன்னர் மகள் தாகத்தால் துடிதுடித்து உயிரிழந்தார். (ம)

ஹொங்கொங் பேரெழுச்சி வெற்றி

ஹொங்கொங், ஜூன் 17

ஹொங்கொங்கில் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்துவது தொடர்பான சர்ச்சைக்குரிய சட்ட வரைவு, மக்கள் போராட்டம் கார ணமாக இடை நிறுத்தி வைக்கப் பட்டது.

இங்கிலாந்தின் காலனி நாடாக இருந்து வந்த ஹொங்கொங், 1997ஆம் ஆண்டு முதல் சீனா வின் சிறப்பு நிர்வாகப் பகுதிகளில் ஒன்றாக மாறியது. அது முதல், சீனாவின் நேரடிக்கட்டுப்பாட்டில் இந்த நாடு உள்ளது. இந்த நாட் டின் தலைமை நிர்வாகத் தலை வராக கேரி லாம் உள்ளார்.

இந்த நிலையில், அங்கு குற்ற வழக்குகளில் சிக்குகிறவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, அங்கு வழக்கு விசாரணையை சந் திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர் வாகம் முடிவு செய்தது. ஆனால் இது, ஹொங்கொங் மக்களி டையே பெரும் கொந்தளிப்பை யும், சர்ச்சையையும் ஏற்படுத்தி யது. கடந்த 9ஆம் திகதி ஹொங் கொங்கில் லட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி மாபெ ரும் போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து நேற்றுமுன்தினம் இரவு கேரி லாம், தனது ஆலோ சகர்களுடன் அவசர கூட்டம் ஒன்றை நடத்தினார்.

அதில் மக்கள் போராட்டத்தால் நிலைமை கைமீறிப்போய்க் கொண்டிருப்பதால் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த சட்டவ ரைவை தற்காலிகமாக இடை நிறுத்தி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. (ம)

நியூசிலாந்தில் நிலநடுக்கம்!

நியூசிலாந்து நாட்டில் நேற்று நிலநடுக் கம் ஏற்பட்டது. 7.4 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

மக்கள் அதிகம் வசிக்காத கெர்மடெக் தீவு பகுதிகளில் வடக்கிலே இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

கடலோர பகுதிகளில் கடும் பாதிப்பு ஏற் படுத்தும் அளவில் சுனாமி அலைகள் இருக்கும் என முதலில் எச்சரிக்கை விடப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப் பான இடங்களுக்கு செல்லும்படி அறி வுறுத்தப்பட்டது. அதன்பின், சுனாமி எச்சரிக்கையை நியூசிலாந்து அரசு திரும்பப்பெற்றது. (ம)

சோமாலியாவில் குண்டு வெடிப்பு 12 பேர் இறப்பு

மொகடிஷு, ஜூன் 17

சோமாலியத் தலைநகர் மொகடிவில் உள்ள நாடா ளுமன்றம் அருகே நேற்று முன்தினம் பயங்கரவாதி கள் நடத்திய மகிழுந்து குண்டு தாக்குதலில் 12 பேர் உடல் சிதறி சாவடைந் தனர்.

அல் குவைதா பயங்கர வாத இயக்கத்தின் ஆதர வாளர்களாக சோமாலியா நாட்டில் இயங்கிவரும் அல் ஷபாப் பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் களை நடத்தி வருகின்ற னர். அந்த வகையில் சோமாலிய நாடாளுமன் றத்துக்கு அருகில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் சாவ டைந்தனர். (ம)

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கீச்சகப் பதி வுகளைக் கொண்டு நூலகமொன்று அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. அந்த நூலகத்தில் வரையப்பட்டி ருக்கும் ஓவியமே இது. வெள்ளைமாளி கையின் அதிகாரிகள் ட்ரம்ப் தலைமை யில் அயல்நாட்டுக்குப் படையெடுத்துச் செல்வதுபோன்று இந்த ஓவியம் வரை யப்பட்டுள்ளது. (ம)

இன்றைய நாள்

மேடம்: எதிர்மறையாக பேசுவோரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஆரவாரத்தன்மையை தவிர்க்கவும். பணவரவில் தாமதம் இருக்கும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

இடபம்: செயல்களில் பொறுமையும், திறமையும் நிறைந்திருக்கும். சமூகத்தில் கூடுதல் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். குடும்ப பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

மிதுனம்: உங்கள் உறவினர் அனுகூலமாக நடந்து கொள்வர். மனதில் கூடுதல் நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு, திட்டமிட்டபடி நிறைவேறும்.

கடகம்: விவாதம் செய்வதை தவிருங்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும்.. வெளியூர் பயணத்தில் மாற்றம் செய்வீர்கள்.

சிம்மம்: செயல்களின் விளைவு உணர்ந்து பணிபுரிவது அவசியம். குடும்ப உறுப்பினர் உதவிகரமாக நடந்து கொள்வர். கூடுதல் பணவரவில் குடும்ப தேவை நிறைவேறும்.

கன்னி: மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். எந்த காரியத்திலும் சமயோசிதமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து மனதில் நம்பிக்கை வளரும். உபரி பணவரு மானம் வந்து சேரும்.

துலாம்: உங்களை சிலர் குறை சொல்வர். உழைப்பில் கவனம் கொள்வது நல்லபலன் தரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். குடும்ப செலவுகளில் தாராளம் பின்பற்றுவீர்கள்.

விருச்சிகம்: சமூக நலப் பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். இதனால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி எளிதாக நிறைவேறும்.

தனுசு: அனுபவசாலியின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை சீராகும். பணவரவு அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

மகரம்: உங்கள் செயல்களில் எளிமையும், நிதானமும் நிறைந்திருக்கும். தொழிலில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி பூர்த்தி செய்வீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

கும்பம்: சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி எளிதாக நிறைவேறும். தானம், தர்மத்திற்கு செலவு செய்வீர்கள்.

மீனம்: உங்களின் எதார்த்த பேச்சு சிலருக்கு மனவருத்தத்தை தரலாம்; நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழிலில் அபிவிருத்தி செய்ய கூடுதல் பணம் தேவைப்படும்.

பால்நிலை சமத்துவத்தை வலியுறுத்தி சுவிற்சர்லாந்தில் பெண்கள் நேற்று முன்தினம் போராட்டங்களை முன்னெடுத்தனர். (ம)

நெத்தன்யாகு வருகையை புறக்கணித்த இம்ரான்கான்

உள்நாட்டில் குவிகிறது பாராட்டு பன்னாட்டில் குவிகிறது எதிர்ப்பு

பிஷ்கெக், ஜூன் 17

ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் இஸ்ரேலிய தலைமை அமைச்சர் பென்யமின் நெத்தன்யாகுவின் வருகைக்கு பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான்கான் வெளிப்படையான எதிர்ப்பை வெளியிட்டமை பாகிஸ்தானில் பாராட்டப்படுகிறது. அதேநேரம் பன்னாட்டுச் சமூகத்தின் மட்டத்தில் சிறு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

கிர்கிஸ்தான் நாட்டின் தலைநகரான பிஷ்செக்நகரில் ஷங்காய் ஒத்துழைப்பு மாநாடு நேற்று ஆரம்பித்தது. இந்த மாநாட்டுக்காக உலகத் தலைவர்கள் ஒவ்வொருவராக வருகை தந்தனர். இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் நெத்தன்யாகு வருகையில் அவரைச் சிறிதும் சட்டைசெய்யாது இம்ரான் கான் தனது இருக்கையில் அமர்ந்து இருந்தார்.

பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களை பாகிஸ்தான் காலாகாலமாகக் கண்டித்து வருகிறது. இத்தகையதொரு நிலையில் நெத்தன்யாகுவுக்குத் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தவே இம்ரான் கான் எழுந்து நிற்காமல் இருக்கையில் அமர்ந்து இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்ரானின் இந்த வெளிப்படையான செயலை பாகிஸ்தானியர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். இந்திய ஊடகங்கள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (ம)

இந்திய எல்லைக்குள் செல்ல பாக்.தொடருந்துக்குத் தடை!

இஸ்லாமபாத், ஜூன் 17

தங்கள் நாட்டு தொடருந்தை இந்திய எல்லைக்குள் செல்ல இந்திய அதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்டனர் என்று பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

சீக்கியர்களின் மதகுருக்களில் ஒருவரான அருந்தேவ் ஜீன் நினைவு தினம் அனுசரிக்கும் ஜோர்மீலா என்றநிகழ்வு பாகிஸ்தான் நாட்டின் லாகூர் மாகாணத்தில் ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் உள்ள சீக்கியர்கள் பலர் கலந்து கொள்வது வழக்கம். இந்நிலையில் இந்த ஆண்டுக்கான நினைவு நாள் அனுசரிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இந்தியாவை சேர்ந்த 200 சீக்கிய யாத்திரிகர்களுக்கு பாகிஸ்தான் அரசு அனுமதி வழங்கியிருந்தது. சீக்கிய யாத்திரிகர்கள் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலிருந்து லாகூர் வருவதற்கு பாகிஸ்தான் அரசு சார்பில் சிறப்பு தொடருந்தை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் தங்கள் நாட்டு தொடருந்தை இந்திய எல்லைக்குள் அனுமதிக்க அந்நாட்டு அதிகாரிகள் மறுத்துவிட்டதாகவும், அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணம் குறித்து எதுவும் கூறவில்லை என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. (ம)





தவான் காயத்தில் இருந்து வெகு விரைவில் மீள்வார்

கோக்லி நம்பிக்கை

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் காயம் அடைந்தார். அவரது பெருவிரலில் முறிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் 2 முதல் 3 வார காலம் விளையாட முடியாது.

இதனைத்தொடர்ந்து ரிஷப் பந்த் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் சபை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆகையால் அவர் இங்கிலாந்து சென்றுள்ளார்.

இது குறித்து பேசிய கோக்லி தெரிவிக்கையில்;

தவான் ஒரு மிக சிறந்த துடுப்பாட்ட வீரர். தான் எப்படியாவது உலகக் கிண்ணப் போட்டிகளில் மீண்டும் பங்கேற்று விளையாட வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் அதிகப்படியாக உள்ளது. அத்தகையு எண்ணங்கள் தவான் காயத்திலிருந்து விரைவாக மீண்டு வர உதவிகரமாக அமையும்.

மேலும், லீக் ஆட்டங்களில் மாற்று வீரர்களாக விஜய் சங்கர், தினேஷ் கார்த்திக் ஆகியோரில் ஒருவரை போட்டியின் சூழ்நிலைக்கு ஏற்ப களமிறக்கி விளையாடவுள்ளோம்.

ஆனால் அரையிறுதி ஆட்டங்களுக்கு முன்னதாக நிச்சயம் தவான் முழு உடல் தகுதி பெற்றுவிடுவார் என நம்புகிறோம். ஆகையால் தவானுக்கு பதிலாக உலகக் கிண்ணத்தில் முழுவதற்குமான மாற்று வீரர் யாரையும் தேர்வு செய்ய வில்லை - என்றார்.

கடற்கரைக் கரப்பந்தாட்டம் யாழ். பெண்கள் சம்பியன்

கரணவாய், ஜூன் 17

பெண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டத் தொடரில் மாகாணச் சம்பியனாகியது யாழ்ப்பாண மாவட்ட அணி.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடர் வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதின.

3 செற்களைக்கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் செற்றை 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வவுனியா மாவட்ட அணி கைப்பற்றியது. சரிவில் இருந்து மீண்டும் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 21:14, 15:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாண மாவட்ட அணி. (ம-108)

மாகாண மட்ட கடற்கரை கபடியில்
2 பிரிவுகளிலும் யாழ். சம்பியன்

கரணவாய், ஜூன் 17

மாகாணமட்ட கடற்கரைக் கபடியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபால் பிரிவுகளிலும் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கடற்கரை கபடித் தொடரின் இறுதியாட்டங்கள் வல்வை ரேவடி கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இதில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் அபாரமாக விளையாடிய யாழ்ப்பாண மாவட்டட அணி 53:36 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண்ணம் வென்றது. மூன்றாம் இடத்தை வவுனியா மாவட்ட அணி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதின.

46:24 என்ற புள்ளி களைப் பெற்று வெற்றிபெற்றது யாழ்ப் பாண மாவட்ட அணி. மன்னார் மாவட்ட அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது. (ம-108)

கடற்கரை கரப்பந்தாட்டத்தில் மன்னார் மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப் பாண மாவட்ட அணி மோதியது.

3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் முதல் இரண்டு செற்களையும் முறையே 21:18, 21:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று நேர்செற் கணக்கில் சம்பியனானது மன்னார் மாவட்ட அணி. (ம-23)

இன்றைய ஆட்டம்

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத்தின் விளையாட்டுக் குழுத் தலைவர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகமும் இரவு 7.00 மணியளவில் மோதுகின்றன.

உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் பன்ட் சேர்த்துக்கொள்ளப் பட்டதை அடுத்து அவருக்கு இலக்குக்காப்புத் தொடர்பான பயிற்சிகளை டோனி வழங்கினார். சுமார் 2 மணிநேரம் பன்ட்டுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. (ம)

இந்திய அணியில் ஐந்து இலக்குக் காப்பாளர்கள்!

உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் பன்ட் சேர்த்துக்கொள்ளப்பட்டதை அடுத்து இந்திய அணியில் தற்போது ஐந்து இலக்குக் காப்பாளர்கள் உள்ளனர்.

முன்னதாக அறிவிக்கப்பட்ட 15 பேர் கொண்ட இந்திய அணியில் டோனி, டினேஸ் கார்த்திக், லோகேஸ் ராகுல், கேதர் யாதவ் ஆகிய நால்வரும் இலக்குக் காப்பாளர்களாக அமைந்திருந்தனர். பன்ட் வந்ததை அடுத்து அணிக்குள் ஐந்து இலக்குக் காப்பாளர்கள் உள்ளனர். (ம)

இந்திய அணியுடன் இணைந்தார் பன்ட்!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அழைப்பை அடுத்து இந்திய அணியுடன் இணைந்தார் அதிரடி வீரர் பன்ட்.

இங்கிலாந்தில் உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்று வருகிறது. இந்திய அணி ஆஸ்திரேலியாவுடன் மோதிய ஆட்டத்தில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் சதம் விளாசினார். இந்த ஆட்டத்தில் அவரின் கையில் காயமும் ஏற்பட்டது. இதையடுத்தே பன்ட் அணிக்குள் அழைக்கப்பட்டார். தவானின் காயம் குணமடையாத பட்சத்தில் பதில் வீரராகக் கடமையாற்றவே பன்ட் அழைக்கப்பட்டார். (ம)



உலகின் மிகப் பெரிதான துடுப்புமட்டை அறிமுகம்

51 அடி நீளம், 6.6 தொன் எடையுடன் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்ட உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மட்டை கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடந்து வரும் இந்த நேரத்தில் 'தேசத்தை இணைக்கும் உலகக்கோப்பை' என்ற வாசகம் சென்னையில் பரவி வருகிறது. மேலும், சென்னையில் உள்ள பேரங்காடிகள் (ஷாப்பிங் மால்கள்) அனைத்தும் கிரிக்கெட் மற்றும் பிற விளையாட்டுகளையும் ஊக்குவிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. நகரம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் இதற்கு ஆதரவு தெரித்து வருகின்றனர். இந்த நிலையில், சென்னை வேளச்சேரியில் உள்ள பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியில் 51அடி நீளம், 6.6 தொன் எடையுடன் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் கபில் தேவ் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்ட உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் பேட் கின்னஸ் சாதனை படைத்துள்ளது. (ம)

பாகிஸ்தானை வீழ்த்தி இந்திய அணி அபாரம்

பாகிஸ்தான் அணியால் உலகக் கிண்ணத்தில் எப்பொழுதுமே எங்களை வீழ்த்த முடியாது என்று மீண்டும் இந்திய அணி நிரூபித்துள்ளது.

இதுவரை உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணி இந்திய அணியை ஒரு முறை கூட வென்றதில்லை.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற இந்தியா - பாகிஸ்தான் போட்டி பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இடம்பெற்றது. இதில் இந்திய அணி டக்வேத் லூயிஸ் முறைப்படி 89 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. முதலில் களமிறங்கிய இந்திய அணி தனது ஆட்டத்தை ஆரம்பித்தது. தவானின் இடத்தில் கே. எல். ராகுல் - ரோகித்துடன் களமிறங்கி சிறப்பான இணைப்பாட்டத்தை அணிக்கு வழங்கினார். இருவருக்குமான இணைப்பாட்டமாக 136 ஓட்டங்கள் பகிப்பட்டன. ரோகித் சதம் கடந்து அணிக்கு பெரும் பங்காற்றியிருந்தார். அணித் தலைவர் கோக்லியும் தனது பொறுப்பை நிதானமாக செய்திருந்தார்.

எல்லோரும் எதிர்பார்த்த டோனி வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார். பாகிஸ்தான் அணி வீரர்கள் களத்தடுப்புகளில் கோட்டை விட்டனர். இலகுவான ரன் அவுட் முறைகளை சரியாக பயன்படுத்த வில்லை . பந்துகள் அடிக்கடி எல்லைக் கோட்டு களத்தடுப்பாளர்களிடம் சென்றதை அவதானிக்க முடிந்தது.

எதிர்பார்க்கப்பட்டது போல பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர் அமீர் கலக்கியிருந்தார். இறுதி 5 பந்துப் பரிமாற்றங்கள் இருக்கையில் மழை குறுக்கிட்டு சிறு தாமதத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 336 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இமாம் உல் ஹக் ஏமாற்றமளித்தார். அவர் பொறுப்புடன் ஆடியிருந்தால் அணி சிறிது போராடியிருக்கும். எனினும் பாபர் அசாம் , பசர் சமான் அணியை நிலை நிறுத்தினர். அவர்களின் ஆட்டமிழப்போடு அணியின் ஓட்ட எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. புவனேஸ்குமார் 3 ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசும் போது காயம் ஏற்பட்டதால் விஜய்சங்கருக்கு கொடுக்கப்பட அவர் சிறப்பாக பந்து வீசி முக்கிய இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.மீளவும் 35ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மழை குறுக்கீடு செய்தது. மழை காரணமாக டக்வேத் லூயிஸ் முறைப்படி 5 பந்துப்பரிமாற்றங்களில் 135 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது பாகிஸ்தான் அணிக்கு. அப்பொழுதே பாகிஸ்தானின் தோல்வி உறுதி செய்யப்பட்டது. அணி 6 இலக்குகளை இழந்து 89 ஓட்டங்களால் தோல்வியடந்தது.

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி. அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 22.06.19 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி. நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 24.06.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

BCHS
British College of Higher Studies
பெற்றோர்களே! மாணவர்களே,
ஆங்கிலத்தில் புலமை பெற மிகச்சிறந்த வாய்ப்பு
DIPLOMA IN ENGLISH (6 MONTHS COURSE)
தொழில்புரிவோர், பல்கலைக்கழகம் செல்வோர்,
பரீட்சை எழுதுவோருக்கும் மிகச்சிறந்த பாடநெறி
வார நாட்கள், அடிப்படையிலிருந்து...
~~25,000~~ JUST 17,000
முதல் 20 பேருக்கு ADMISSION FREE FREE
வாரம் 08 மணித்தியாலம்
01.07.2019 முதல்... புதிய பிரிவுகள்
Call: 021 222 4550/ 077 703 3039
Sirambiyadi lane, Off Stanley road, Jaffna

ஆப்கானிஸ்தானை ஊதித்தள்ளியதுதென்னாபிரிக்கா!

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இப்பொழுது!!!
மிகக் குறைந்த கட்டணத்தில்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554 528
UK - 350/-
France, Germany, Italy, Denmark 500/=

உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணியை மிகமிக இலகுவாகத் தோற்கடித்தது தென்னாபிரிக்க அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி வெறும் 125 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. 68 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகள் என ஒரு கட்டத்தில் வலுவாக இருந்த ஆப்கானிஸ்தான் மளமளவென இலக்குகளை இழந்து திடீர்ச் சரிவுகண்டு அதலபாதாளத்தில் வீழ்ந்தது. அதிகபட்சமாக ரசிட்கான் 35 ஓட்டங்களையும், நூர் அலி சடான் 32 ஓட்டங்களையும், சஷாய் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தாகிர் 4 இலக்குகளையும், மொறிஸ் 3 இலக்குகளையும், பிளுக்வையோ 2 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர்களே பலமான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். இலக்குச் சரிவில்லாமல் அணி 100 ஓட்டங்களைத் தொட்டது. அணி 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குயின்டன். எனினும் பிறிதொரு இலக்கை இழக்காமல் வெற்றிபெற்றது தென்னாபிரிக்க அணி.

(ம)

மரண அறிவித்தல்

பொன்னையா இராமநாதபிள்ளை

(SPR சுருட்டுத்தொழிலகம், நியூ விநாயகர் ரேட்ஸ், உரிமையாளர்)

பிறப்பு 11.02.1929 இறப்பு 16.06.2019

யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கில் வசித்த பொன்னையா இராமநாத பிள்ளை நேற்று (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை நாகமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகி, சுவாமிநாதபிள்ளை மற்றும் அன்னலட்சுமி, இலங்கநாதபிள்ளை, இராஜேஸ்வரி, ஆகியோரின் அன்புச்சகோதரரும் மகாலட்சுமி (ஜேர்மனி), விஜயலட்சுமி (லண்டன்), பரங்கிரிநாதன் (சுவிஸ்), வரதலட்சுமி (பிரான்ஸ்), பத்மநாதன் (ஜேர்மனி), புஸ்பநாதன் (நியூ விநாயகர் ரேட்ஸ் உரிமையாளர், காளிங்கன் தியேட்டர் ஒழுங்கை), செல்வலட்சுமி (ஆசிரியர், வவுனியா முஸ்லீம் மகாவித்தியாலயம்), ஜோதிலட்சுமி (ஆசிரியர், யாழ் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்), ராஜலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் அ.அமிர்தலிங்கம் (ஜேர்மனி), ர. வைகுந்தவாசம் (லண்டன்), ப.சிவசோதி (சுவிஸ்), உ. சிவனேசச்செல்வன் (பிரான்ஸ்), பிரேமலதா (ஜேர்மன்), செல்வதேவி, க.ஸ்ரீகந்தவேள், (அதிபர் வவுனியா பாவற்குளம் மாகாவித்தியாலயம்), சு. பரமேஸ்வரலிங்கம் (கணக்காளர், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாணம்), து. ரஞ்சித்குமார் (மகாலக்சுமி இலக்கிர்க்கல் உரிமையாளர், கோண்டாவில் சந்தி), ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுரகன், நிரோஜன், செந்துஜன், வேந்துசா, வேணுசா, விவிஜன், ஜெனிஷா, பிரஷா, ஜெனுஷியன், ஆதவன், ஆதீபன், வைஷ்ணவி, சங்கீத், சாயீசன், கார்த்திகேயன், ஹம்சிகா, ஹிஷாந்தி, கஜமுகன், அபிஷஜனி, அபிநயா, ஜெயப்பிரகாஷ், ஹரிசாந் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் மாஸ்ரர் ஹரிசாந்தின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2019) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் தியேட்டர் ஒழுங்கை இணுவில் கிழக்கு .இணுவிலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 828 0730, 077 798 4723, 077 800 0742

வடஇந்திய பத்திரிநாத் கேதார்நாத் கங்கோத்திரி ஜமுனோத்திரி யாத்திரை
நாள்கள் : 16 ஆரம்பம் : 16.07.2019 யாத்திரீகர் : 20
செல்லுமிடங்கள் சுருக்கமாக :
டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், ரிஷிகேஸ், சிவானந்த ஆச்சிரமம், தொங்குபாலம், ராமர்கோயில், லக்சுமணர் கோயில், ஹரித்துவார், கங்காபூசை, மானுசாதேவி, மந்திர் சண்டிதேவிமந்தி இவை இரண்டு ஆலயங்களும், தொங்கு ஊஞ்சல்(விஞ்சில்) பயணம், கங்கோத்தி, அம்மன் ஆலயம், ஜமுனோத்திரி, அம்மன் ஆலயம்.பத்திரிநாத் 108 வைஸ்ணவ ஆலயங்களில் முதன்மையான ஆலயம், மானா, சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், கேதாநாத் திருக்கயிலாயமலைக்கு சமமான ஆலயம், வேறு இடங்களும் காணலாம், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்
NB கேதார் நாத் கெலிக்கொப்ரர் பயணம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை
4விமானரிக்கட், இந்தியாவில் சுற்றிப்பார்க்க A.C வாகன வசதி, மடப்பள்ளி ஆள்கள் மூலம் உடனுக்குடன் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, மினரல்வாட்டர் (குடிநீர்) 2பேருக்கு கட்டில், மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை, இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் விபரத்தை கேட்டறிந்து பதிவு செய்யவும்.
வந்தவர்களைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.
விபரங்களுக்கு : கலாநிதி. T.ஸ்ரீரங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
sriranganathan2601@gmail.com sridevisriranganathan.thuraiappa
077 768 0102/ 077 736 2154
(IN 1033) (4.17)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள், என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.